# கல்வெட்டு



தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் காலாண்டு இதழ்

இதழ் 18 ★ காளயுக்தி ஆண்டு ஆடித் திங்கள் விலை ரு.

அட்டைப்பட விளக்கம்

விண்ணபருமருடைய ஆட்சிக்காலத்தில் நடந்த போரில்
இறந்துபட்ட வீரனுக்கு எடுக்கப்பெற்ற நடுகல்,
கி.பி. 6-ஆம் நூற்றுண்டு, பாப்பம்பாடி, தருமபுரி மாவட்டம்.

கல்வெட்டின் வாசகம்

கோவிசைய விண்ணபருமற்கு நான்காவ
து [தகடூரு] நாடாளும் கங்கரைசரு
மேல் வந்த தண்டத்தோடு எ
[றி]ந்து பட்ட வாணபெருமரைசரு
. . . . . .

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறைக்காக டி துறையின் அச்சகத்தில்,
இத்துறை இயக்குநர் டாக்டர் இரா. நாகசாமி, எம்.ஏ. பிஎச்.டி. அவர்களுக்காகப்
பதிவு அலுவலர் திரு. நடன. காசிநாதன், எம்.ஏ. அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# மறவர்நாட்டு இரு ஓலைச்சாசனங்கள்

வெ. வேதாசலம், எம்.ஏ.
அருங்காட்சியகக் காப்பாளர்

தமிழ்நாட்டுக் கோயில்களுக்குப் பண்டைய அரசர்கள், அரசியல் அதிகாரிகள், பொதுமக்கள் ஆகியோரால் அளிக்கப்பட்ட தானங்கள் ஏட்டுச்சுவடிகளில் எழுதி வைக்கப்பட்டன. அவை கோயில் ஆவணங்களில் வைத்துப் பாதுகாக்கப்பட்டன. காலப்போக்கில் இவற்றில் சில கவனிப்பாரற்றுக் கரையானுக்கு இரையாகி அழிந்து போயின. இன்னும் எத்தனையோ சுவடிகள் சிற்றூர்களிலும் பேரூர்களிலும் உள்ள கோயில்களில் கவனிப்பாரற்று வரலாற்றாய்வாளர்களின் வரவை எதிர்பார்த்து ஏங்கிக்கிடக்கின்றன. அவற்றில் இரண்டு ஓலைச்சாசனங்கள் கள ஆய்வின்போது கண்டறிப்பட்டன.

மறவர்நாட்டு அரசியல் வரலாற்றையும், மக்கள் வாழ்வையும் விளக்கும் இச்சுவடிகளில் ஒன்று முகவை மாவட்டம் தேவகோட்டைக்கு அருகிலுள்ள அனுமந்தக்குடி மாலவநாதசுவாமி கோயில் குருக்களிடத்தில் உள்ளது.[1] மற்றொன்று சிவகெங்கை வட்டத்து திருப்பாச்சேத்திக்கருகிலுள்ள மாரநாட்டு தஞ்சாக்கூர் காவேரி அய்யனார் கோயிலில் உள்ளது.[2] முன்னது கி. பி. 1783-இல் எழுதப்பட்டது. பின்னது 1784-இல் எழுதப்பட்டது. இரண்டும் பிழையுடன் கூடிய அக்காலத்துத் தமிழ்நடையில் எழுதப்பட்டுள்ளன.

இன்று இராமநாதபுரம் மாவட்டம் என்று அழைக்கப்பெறும் மறவர்சீமை பண்டு பல பூசல்களுக்குப் பிறகு கி.பி. 1730-இல் இரண்டாகப் பிளவுபட்டது. இராமநாதபுரம் பகுதி 'பெரியமறவர்நாடு' என்றும், சிவகெங்கைச்சீமை 'சிறியமறவர்நாடு' என்றும் அழைக்கப் பெற்றன. இவ்வோலைச்சாசனங்களில் ஒன்று பெரியமறவர்நாட்டையும் மற்றொன்று சிறியமறவர்நாட்டையும் சார்ந்தது. அனுமந்தக்குடியில் கிடைத்த சாசனம் முத்துவிசைய ரெகுநாத முத்துராமலிங்கசேதுபதி காத்ததேவர்களின் உத்திரவின்படி வெளியிடப்பட்டதாகும். தஞ்சாக்கூர் சுவடி மருதுசகோதரர்கள் காலத்தினைச் சார்ந்ததாகும்.

**அனுமந்தக்குடி**

தேவகோட்டைக்கு அண்மையில் ஓடும் விரிசூழியாற்றின் வடகரையில் அமைந்துள்ளது அனுமந்தக்குடி. இவ்வூரில் சென்ற நூற்றூண்டில் கட்டப்பட்ட சமணக்கோயில் ஒன்று உள்ளது. இக்கோயில்

அதற்கு முன்பு விரிசூழியாற்றின் தென்கரையில் இருந்தது. அது கி.பி. 1882-இல் விரிசூழியாற்றில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிதைந்து போயிற்று. அதன்பிறகு அதிலிருந்த சிற்பங்கள், கட்டடப் பகுதிகள் முதலியவற்றை வடகரைக்கு எடுத்துவந்து தற்போதுள்ள அனுமந்தக்குடி சமணக் கோயிலை எழுப்பியுள்ளனர். இக்கோயில் சமணத் தீர்த்தங்கரர்களில் இருபத்து மூன்றாவது தீர்த்தங்கரராக வந்த பார்சுவநாதருக்காக எழுப் பப்பட்ட கோயிலாகும். இங்கு அவருக்கும் அவரது இயக்கியாகிய அம்பிகைக்கும் கோயில் எழுப்பப்பட்டிருக்கின்றது. ஓலைச் சுவடியில் பார்சுவநாதர் 'மானவநாதசுவாமி' என்றும், இயக்கி அம்பிகை 'மரகத வல்லியம்மன்' என்றும் குறிப்பிடப்படுகின்றனர்.

இக்கோயிலிலேயே ஜுவாலாமாலினிக்கும், பிரமதேவர்க்கும், மகாசாஸ்தாவுக்கும் சிற்றாலயங்கள் உள்ளன. கோயிலின் முன்புறம் பழைய உருவங்கள் உள்ள பலிபீடம் ஒன்று உள்ளது. இவ்வுருவங்கள் பழைய கோயிலின் சிதைந்த பகுதியிலிருந்து எடுத்துவரப் பெற்றவை யாகும். இவ்வுருவங்களும் விரிசூழியாற்றின் தென்கரையில் சிதைந்து கிடக்கும் கட்டிடப் பகுதிகளும் முற்காலப் பாண்டியர் காலத்தில் இக் கோயில் எழுப்பப்பட்டிருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்து கின்றன. இதை மேலும் உறுதிப்படுத்துவது போன்று முற்காலப் பாண்டியர் காலத்தினைச் சார்ந்த வட்டெழுத்துக் கல்வெட்டுத் துண்டு ஒன்று இக்கோயிலில் காணப்படுகின்றது. இவ்வூர் விஜயநகர காலத் தினைச் சார்ந்த கல்வெட்டு ஒன்றில் (கி.பி. 1535) முத்தூற்றுக்கூற்றத்து குருவடிமிடி......என்னும் ஜினேந்திரமங்கலம் என்று குறிப்பிடப்படு கின்றது.

அனுமந்தக்குடி ஓலைச் சாசனம்

விசயநகர காலத்திற்குப் பின்னர் வந்த மறவர் நாட்டு சேதுபதி களின் செல்வாக்கையும் இக்கோயில் பெற்று விளங்கியது என்பதை இவ்வனுமந்தக்குடி ஓலைச் சாசனம் உணர்த்துகின்றது. சேதுபதிகள் வைதிகமதத்தின் மீது மிகுந்த ஈடுபாடு காட்டியபோதும் தொன்று தொட்டு வந்த பழைய மரபை அழிக்காது, சமணம் போன்ற புறச் சமயங்களுக்கும் ஆதரவளித்திருக்கின்றனர் என்பதற்கு இவ்வோலைச் சாசனம் சான்றாய் விளங்குகின்றது.

இராமநாதபுரம் பகுதியை கி.பி. 1749முதல் 1762வரை ஆண்டவர் செல்லமுத்து விஜயரகுநாத சேதுபதி ஆவார். இவரை அவரது செப் பேடு ஒன்று 'சிவபூசா துரந்தரன்' என்கிறது. இராமேஸ்வரம் பர்வத வர்த்தினி நெய்வேத்திய பூசைக்கு இவரது பிரதானி உபயமாக அஞ்சு கோட்டைப் பற்றில் நிலங்கள் அளித்து தாமிர சாசனம் ஒன்றையும் அளித்தார் என்றும் தெரிவிக்கின்றது.[3] இவர் தமது ஆட்சிக்காலத்தில் இவ்வனுமந்தக்குடியைச் சார்ந்த நிலங்கள், தோப்புகள், துரவுகள்

முதலிய அனைத்தையும் மாலவநாத சுவாமிக்கும், இயக்கிமரகதவல்லியம் மனுக்கும், பரிவாரதேவர் மகாசாத்தாவுக்கும் நித்திய பூசைகள் செய்ய வும் கோயில் திருப்பணி வேலைகள் நடத்தவும் தானமாக அளித்திருப் பதை இச்சாசனம் தெரிவிக்கின்றது. இச்சாசனத்தில் இவர் 'இரண்ய கெற்பயாசி குல முத்து விசைய ரெகுநாதசேதுபதி காத்ததேவர்' என்று குறிப்பிடப்படுகின்றார்.

இச்சேதுபதிக்குப் பிறகு கி.பி. 1762-ல் செல்லமுத்துதேவரின் உடன்பிறந்தாள் மகன் முத்துராமலிங்கத்தேவர் பட்டத்திற்கு வந்தார். அப்போது அவருக்கு வயது இரண்டு மாதமேயாகும். அவரது பிரதானியாக தாமோதரம் பிள்ளையும் குழந்தை சேதுபதியின் காப்பா ளராக (guardian) அவரது தாயார் முத்திருளப்ப நாச்சியாரும் உடனி ருந்து நாட்டின் நிருவாகத்தைக் கவனித்து வந்தனர்.[4] கி.பி. 1773-ல் நவாப் மகமது அலி படையெடுத்து வந்து முத்துராமலிங்க சேதுபதி யையும், அவரது தாயாரையும் சிறைபிடித்துச் சென்று திருச்சியில் வைத்தான். இராமநாதபுரம் பகுதிகள் நவாப்பின் ஆட்சிக்குள் வந்தன. அதன்பிறகு நாட்டையிழந்த சேதுபதி எட்டாண்டுகள் திருச்சி சிறை யில் வாடவேண்டியதாயிற்று. பிறகு நவாப் மகமது அலியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு மீண்டும் இராமநாதபுரம் சேதுபதியானார்.[5] பல இன்னல்களுக்கிடையே கி.பி. 1795 வரை ஆட்சி நடத்தினர்.

அவர் மீண்டும் சேதுபதியாக வந்த இவ்வாட்சிக் காலத்தில் கி.பி. 1783-ல் அனுமந்தக் குடியிலிருந்த சமணக் கோயிலுக்கு அனுமந்தக்குடியை அரண்மனை கணக்கில் சேர்த்துக்கொண்டு, ஏதோ காரணத்தினல் அதற்குப் பதிலாக அதற்கு அருகில் விரிசூழியாற்றின் தென்புறமிருந்த வடக்குச் செய்யானேந்தல் என்ற கிராமம் முழுவதையும் மாலவநாத சுவாமிக்கும் மரகதவல்லியம்மனுக்கும் மகா சாத்தாவுக்கும் நித்தியபூசைகள் மாத உத்சவங்கள் அபிஷேகநை வேத்தியம் திருப்பணி வேலைகள் செய்யத் தானமாக அளித்தார். அனுமந்தக்குடி முன்னாளில் குலமுத்து விசையரெகுநாத சேதுபதியால் அனுமந்தக்குடி மாலவநாதசுவாமி கோயிலுக்கு அளிக்கப்பட்டிருந்தது என்றும் அதற்குப் பதிலாக வடக்குச் செய்யானேந்தல் கிராமம் முழு வதையும் தானமாக அளித்ததாகவும் இவ்வோலைச் சாசனம் தெரிவிக்கின்றது.

வடக்குச் செய்யானேந்தல் கிராமத்தின் கிழக்கு எல்லையாக பன்னனேந்தல் குளக்காலும் மேற்கு எல்லையாக சிவந்தான் கோட்டையும் வடக்கு எல்லையாக புளிகுளமும் தென்னெல்லையாக தெற்குச் செய்யானேந்தல் பாம்பூரணியும் குறிப்பிடப்படுகின்றது. இந்த நான் கெல்லைக்கு உட்பட்ட நஞ்சை, புஞ்சை, திட்டு, திடல்,

மாவசை, மரவடை, மரங்கள், கிணறுகளும் மேலும் சமுதாயத்திற்குச் சொந்தமானவை என்று கட்டளையிடப்பட்டது.

அனைத்தும் மாலவநாதர் கோயிலுக்குச் சொந்தமான சேதுபதி யிட்ட இவ்வுத்தரவை ஆணையாக்கி வெளியிட்டவர் பிரதானி முத்திருளப்பிள்ளை ஆவார். இவர் முத்துராமலிங்க சேதுபதியின் இரண்டாவது ஆட்சிப்பகுதியில் தாமோதரம்பிள்ளைக்குப் பிறகு வந்த புதிய பிரதானியாக இருக்கவேண்டும்.

இவ்வோலைச் சாசனத்தின் இறுதிப்பகுதியில் சாட்சியாக வணங்காமுடி பழனியப்ப சேர்வைகாரரும் வணங்காமுடி அணியாபதி அய்யணம்பலமும் கையொப்பம் இட்டுள்ளார்கள். இவர்கள் இருவரும் யாராக இருக்கவேண்டும் என்று உய்த்துணர இடமுள்ளது. மருது சகோதரர்களின் தந்தையார், உடையார் சேர்வை என்னும் மொக்க பழனியப்பன் சேர்வையாவர். இவர் முத்து விஜயரெகுநாத சேதுபதி காலத்தில் தமது குடும்பத்துடன் இராமநாதபுரம் சேர்ந்து கொங்காரு தெருவில் குடியேறினர். சேதுபதியின் படைப்பிரிவில் சேர்ந்து சிறப்பு மிக்க படைத்தலைவராய் விளங்கினர் என்பர்.[6] இம் மொக்க பழனியப்ப சேர்வையே முத்துராமலிங்க சேதுபதியின் காலத்தில் தொடர்ந்து சேதுபதியின் படையில் பணியாற்றியிருக்க வேண்டும். அவரே இவ்வோலையிலும் சாட்சியாகக் கையொப்ப மிட்டிருக்க வேண்டும். அணியாபதி அய்யணம்பலம், சேதுபதியின் படைத்தலைவர்களுள் ஒருவராக அக்காலத்தில் விளங்கியவராக இருக்க வேண்டும். முத்துராமலிங்க சேதுபதியின் விருப்பத்திற்கு மாறாக கி.பி. 1783-இல் மறவர் அல்லாத சேர்வைகாரர்களான மருது சகோதரர்கள் சிவகெங்கை ஆட்சிப்பொறுப்பில் வேலுநாச்சியார்க்குத் துணையாக இருந்த காலத்தில், அவர்களது தந்தையார் அவர்களுக்கு மாறாக இராமநாதபுரம் சேதுபதியினிடத்து பணிபுரிந்து கொண்டி ருந்தது பின்வரும் இவ்வோலைச் சாசனத்தின் மூலம் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

(பக்கம் ஒன்று)

ஸ்ரீ ராமஜெயம்

1 ஸ்வஸ்தி ஸ்ரீ சாலியவாகன சகாற்த்தம் சூளாரு இன் செல்லா நின்ற சுபகிறுது வருசம் மார்கழி மீ௨ உ௫எ. சுவாமி மா.

2 லவநாத சுவாமிக்கும் மரகதவல்லியம்மனுக்கும் மகா சாத்தாவுக்கும் நித்தியப்புசை மாத உத்சேபம் அபிசேக நெய்வே

3 தினத்துக்கு திருப்பணி வேலைக்கும் மகாராசராச மானிய-ள- இரணிய கெற்பயாசி குலமுத்துவிசைய ரெகுநாத சேதுபதி (ச)

4 காத்த தேவரவர்கள் கட்டளையிட்ட கிருமமாவது அனுமந்தக் குடி முன் பூறுவீகமாக நடந்து வந்ததை அரண்மனையில் (திறப்பில்)

5 சேத்துக்கொண்டு மா.ரு.ள ம(ா)னிய -ள- முத்துவிசைய ரெகுநாத முத்துராமலிங்க சேதுபதி காத்ததேவரவர்கள் உத்தர

6 வின் பேரில் பிரதானி முத்திருளப்ப பிள்ளையவர்கள் உத்தரவு பண்ணின கிருமம் வடக்குச் செய்யானேந்த(லுக்கு) பெருநான் கெல்லையாவது.

7 கீள்பார்க் கெல்லையாவது பன்னுனேந்தல் குளக்காலுக்கும் மேற்கும் மேற்பார்க் கெல்லையாவது சிவந்தான்கோட்டை எல்கைக்கு

## பக்கம் இரண்டு

8 கிளக்கு வடபார்க்கெல்லையாவது புளிகுளத்து யெல்கைக்கு தெற்கு தென்பார்க் கெல்லையாவது தெற்குச் செய்யானேந்தல் பாம்பூரணிக்கு

9 வடக்கு இந்த பெருநான் கெல்லைக்கு உட்பட்ட நஞ்சை புஞ்சை திட்டு திடல் மாவடை மரவடை மேல்நோக்கிய மரமும் கீள்நோக்கிய கிண

10 றும் (வயப்புச் செப்பிறை....) சகல சமுதாய பிரபா பாத்திய மும் சுவாமி மானுவநாதர்க்கும் மரகதவல்லி அம்மனுக்கும் மகாசாத்தாவுக்கும்

11 தானசாதனம் பூறுவமாக கட்டளையிட்டோம் (ஆதி) சந்தி ராதித்த . . உள்ளவரைக்கும் அனுபவித்துக்கொள்ளக் கடவ ராகவும்

12 இந்த தர்மத்துக்கு யாதாமொருவன் விகர்(த)ம் பண்ணி னவன் கெங்கைக்கரையில் காராம் பசுவையும் பிதாவையும் குருவையும் கொ

13 ண்ட[7] தோஷபிராத்தி யடையக் கடவராகவும் இதுக்கு சாட்சி வணங்காமுடி பளனியப்ப சேருவைகாரன் ஷெ அனியாபதி (அ)ய்யண

14 ஊ°பலம்[8]

சமணர்கோயில் ஒன்றிற்கு அளிக்கப்பட்ட இவ்வோலைச் சாசனத்தின் தொடக்கத்தில் 'ஸ்ரீராமசெயம்' என்று குறிப்பிடப்பட்டிருப்பது வியப்பைத் தோற்றுவிக்கிறது. சேதுபதிகள் இராமனின் மீது கொண்ட பற்றைக் காட்டுகின்றது. இச்சுவடி இரண்டே பக்கங்களுடன் மிகச்சிறியதாய் காணப்படுகிறது.

தஞ்சாக்கூர்

இவ்வூர் முற்காலப்பாண்டியர் காலத்திலிருந்தே சிறப்புப் பெற்ற ஊராக இருந்துவந்துள்ளது. முற்காலப்பாண்டியர் காலத்தினைச் சார்ந்த முருகன் சிலையொன்றும், பிற்காலப் பாண்டியர் காலத்தினைச் சார்ந்த துண்டுக் கல்வெட்டுக்களும் இவ்வூரில் காணப்படுகின்றன. தஞ்சைவாணன்கோவையில் குறிப்பிடப்பெறும் மாறைநாட்டுத் தலைநகர் தஞ்சாக்கூர் இதுவேயாகும். இவ்வூரின் தென்புறம் நாயக்கர் காலத்தினைச் சார்ந்த அய்யனார் கோயில் ஒன்று கிழக்குப்பார்த்து அமைந்துள்ளது. பரிவார ஆலயங்களுடன் கம்பீரமாக காவல்பூதமும் குதிரை வாயிலில் நிற்க, கருவறையில் அய்யனார் பூரணை புஷ்கலையுடன் அமர்ந்திருக்கின்றார். இவ்வய்யனாரை 'காவேரி அய்யன்' என்றும், இக்கோயிலை 'காவேரி அய்யனார் கோயில்' என்றும் இவ்வூரார் அழைக்கின்றனர். ஆண்டு உத்சவத்திற்கு முன்னர் காவிரியாற்றிலிருந்து நீரெடுத்து வந்து இவ்வய்யனாரை நீராட்டுவதால் இவ்வைய்யனார் 'காவேரி அய்யன்' என்று பெயர் பெற்றதாக இவ்வூரார் கூறுகின்றனர்.

தஞ்சாக்கூர் ஓலைச்சாசனம்

மறவர்நாடு இரண்டாகப் பிளவுபட்டபிறகு சிவகெங்கைச் சீமையாகிய சிறுமறவர்நாட்டுக்கு முதல் அதிபதியாக நாலுகோட்டை உடையத்தேவர் என்று அழைக்கப்பட்ட சசிவர்ணத்தேவர், ராஜமுத்து விஜயரகுநாத பெரியஉடையத்தேவர் என்ற சிறப்புப்பெயருடன் சிங்காதனம் ஏறினார்[9] இவரை கி.பி. 1733-இல் வெளியிட்ட செப்பேடு ஒன்று 'அரசு நிலையிட்டவன்' அதாவது அரசை நிலைநிறுத்தியவன் (ஸ்தாபித்தவன்), சோழமண்டலச் சண்டபிரசண்டன், பாண்டிமண்டல ஸ்தாபனாசாரியன் என்று குறிப்பிடுகின்றது[10] தஞ்சாக்கூர் காவேரி அய்யனாருக்கு இச்சசிவர்ணத்தேவருக்குப் புண்ணியம் உண்டாகும்படி கி.பி. 1784-இல் நித்தியபூசை, நைவேத்தியம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டதை தஞ்சாக்கூர் ஓலைச்சாசனம் தெரிவிக்கின்றது. இச்சசிவர்ணத்தேவர் முதன்முதலில் சிவகெங்கைச் சீமை அரசை ஸ்தாபித்தமையால் 'அரசு

நிலையிட்ட விஜயரெகுநாத உடையத்தேவர்' என்ற அடைமொழியோடு குறிப்பிடப்படுகின்றார்.

இவ்வோலைச்சாசனத்தைச் சிவகெங்கையில் கி.பி. 1783-இல் இராணி வேலுநாச்சியார்க்குத் துணையாக இருந்த பெரியமருதுவும், தஞ்சாக்கூரில் இருந்த பத்தக்கரை அம்பலகாரரும், காணியாட்சியாளர்களும் கூடி எழுதினர். இதனை இச்சாசனம்

1 சாலியவாகன சகாத்தம் ௬௭௱௫ இதன்மேல் செல்லாநின்ற குரோதி ஞூ ஆவணி மீ . . . சுக்கிரவாரமும்

2 திரையோதசி(யும்) புனர்பூச நட்செத்திரமும் சித்திநாம யோகமுங் கிரசவா(கரணமுங்) கூடின சுபயோக சுபதினத்

3 தில் தஞ்சாக்கூர் சுவாமி காவேரி அய்யன் சன்னதிதானத்துக்கு அரசு நிலையிட்ட விசயரகுநாதபெரிய உடை[ம]யாத்

4 தேவரவர்களுக்குப் புண்ணியமாக ராய[11]–மானிய பெரிய மருது சேர்வைக்காரர்களும் தஞ்சாக்கூரிலிருக்கும் அம்பலம்

5 சோலைத்தேவன் – காவேரித்தேவன்–தண்ணத்தேவன்–வேலத்தேவன் – கூளாணித்தேவன் சுந்தத்தேவன் – பே..புள்ளிச்சித்தேவன் - குன்னியழகன் - மொந்தத்தேவன் – குமாரத்தேவன் யிந்தப்பத்தக்கரைகாரரும் திசைக்காவல் மாரநாட்டுச்சீமை திசைக்காவல் ராய-மருதுசேர்வை காரவர்களும் பெரியமருது சேறுவைகாரர்களும் தி

6 சைக்காவல் காணியாட்சிக்காரர்களும் கூடி எழுதின தர்ம சாதனம் எழுதிக்குடுத்தபடி தர்மசாதன பட்டயமானது . . .

என்று தெரிவிக்கின்றது.

இதன்படி தஞ்சாக்கூர் காவேரி அய்யனார் கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் அனைத்திற்கும் வரிநீக்கம் செய்யப்பட்டு குளவெட்டு, சேத்துக்காணிக்கை என்ற இருவரிகளைமட்டும் செலுத்துமாறு ஆணையிடப்பட்டது. மேலும் தஞ்சாக்கூர் கிராமத்தில் குடியிருக்கின்ற அம்பலகாரர், குடியானவர், நிலைமையாளியள், அண்ணிக்குடி,[12] பலபட்டடைக்குடி ஆகிய அனைவரும் வீட்டுக்கு கட்டளைக்குடி ஒன்றுக்கு (தலைக்கட்டு ஒன்றுக்கு) வருசந்தோறும் ஒரு பணம் காவேரி அய்யனார் நித்திய பூசைகள் நெய்வேத்தியத்திற்காகக் கொடுக்கக் வேண்டும் என்று முடிவு செய்தனர்.

இவ்வோலைச் சாசனத்தினை எழுதியவராக நாட்டுக் கணக்கு கலியுகராயபிள்ளை மகன் அய்யம்பெருமாள் பிள்ளை குறிப்பிடப்படு

கின்றார். இதைச் சம்மதித்த சாட்சியாகக் கிராமமணியம் கொக்கு பிள்ளையும் கிராமக் கணக்கு வெங்கடாசலமும், பத்துக்கரை அம்பலகாரர்களும் குறிப்பிடப்படுகின்றனர். ஓலைச் சுவடியின் இறுதியில் நாவிதன் திருவேட்டை, தோட்டி - வீரன், சங்கிலியன் - சோனை, வண்ணார் முருகன் ஆகியோர் குறிப்பிடப்படுகின்றனர்.

இவ்வேட்டுச் சுவடியின் அசல் பிரதி அரண்மனையில் இருக்கிறது என்றும் அதைப் பார்த்து தஞ்சாக்கூரிலிருக்கும் இவ்வோலைச் சாசனம் எழுதப்பட்டது என்ற ஓர் அரிய செய்தியையும் இவ்வோலைச் சாசனத்தின் இறுதி வரிகளில் காணமுடிகின்றது.

'இதற்கு அசல் நிறுபம் அரண்மனை நிறுபம் யிந்தயேட்டிலே
இருக்குது அதைப்பார்த்து எழுதிய நகல்'

கி.பி. 1873-இல் அரச ஆணைகள் வெளியிட்டபோது அவற்றின் உண்மை நகல், அரசன் அரண்மனையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு அதன் பிரதி சம்மந்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்பட்ட முறையினை இச்சுவடி மூலம் அறிந்துகொள்ளமுடிகின்றது.

இச்சுவடியில் அய்யனார் கோயிலுக்கு விடப்பட்ட நிலம் 'அய்யம் பாகம்' என்று குறிப்பிடப்படுகின்றது. கண்மாய், குளம் முதலிய நீர் நிலைகள் வெட்டுவதற்காக வாங்கப்பட்ட வரி 'குளவெட்டு' என்றும் அவற்றில் ஆண்டுதோறும் தேங்கிய தூரினை எடுப்பதற்காக வாங்கப்பட்ட வரி 'சேத்துக்காணிக்கை' என்றும் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வோலைச்சாசனம் சிவகெங்கைச்சீமையில் வீரம் விளைத்து அழியாப் புகழ்பெற்ற மருது சகோதரர்களைப்பற்றியும், சிவகெங்கைச் சீமையின் முதல் அரசராக விளங்கிய சசிவர்ணத் தேவரைப் பற்றியும் கூறும் வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும். இது முத்து வடுகநாதர் மறைவுக்குப் பிறகு அவரது மனைவி வேலுநாச்சியாரின் செல்வாக்கு பெற்றிருந்த மறவர் அல்லாத சேர்வைக்காரர் வகுப்பைச் சார்ந்த பெரியமருது சிவகெங்கை நிறுவாகத்தில் முக்கியப் பொறுப்பு ஏற்றதும் கி. பி. 1783-இல் வெளியிடப்பட்டிருக்கின்றது. இப்பெரியமருது உயிர்துறக்கும்போது மரணவாக்குமூலம் ஒன்று வெளியிட்டதாகக் கூறப்படுகின்றது. அதில் முத்துவடுகநாதர் மறைவிற்குப் பிறகு அவரது மனைவி வேலுநாச்சியாரை மணந்து கொண்டதன் மூலமாக வேலுநாச்சியார்க்குப் பாத்தியமான சிவகெங்கை ஜமீனுக்கு உரிய உயில்சாசனம் அவள் மூலம் பெற்றிருப்பதாகவும்; கி. பி. 1773-இல் உயில் சாசனம் பெற்று மாத்தூர் நவாப் அவர்களால் சிவகெங்கை ஜமீன் ஜப்தி செய்து ஏலமாக்கிய பணத்தைத் தான்கட்டி ஏலத்தை நீக்கி அனுபவித்து வருவதாகவும், இதில் பெரிய மருதுவைத் தவிர வேறு யாரொருவர்க்கும் பாத்யம் இல்லை என்றும் குறிப்பிடப்படுகின்றது.[13]

சிவகெங்கைச்சீமை முழுவதற்கும் 1773-இல் இருந்து முழுவுரிமை படைத்தவராக பெரியமருது விளங்கியதாக அவரது மரண வாக்கு மூலம் தெரிவித்தபோதும் இவ்வோலைச்சாசனத்தில் அவரும் அவரது தம்பியும் தஞ்சாக்கூரைச் சுற்றியிருந்த மாரநாட்டுச்சீமையின் 'திசைக் காவல்' என்ற அரசியல் அதிகாரிகளாகவே குறிப்பிடப்படுகின்றனர். முத்துவடுகநாதரின் மறைவிற்குப் பிறகு நிர்வாகத்தில் பெரியமருது முழு அதிகாரம் படைத்திருந்தபோதிலும் வேலுநாச்சியார் உயிருடன் இருந்தமையால் சிவகெங்கையின் அரசர் என்று ஆனைத்துத்தரப்பின ராலும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை மறவர் அல்லாத சேர்வைகாரர் ஆட்சிப்பொறுப்பில் இருப்பது பெரியமறவர்நாட்டு இராமநாதபுரம் இராமலிங்கசேதுபதிக்கும் பிடிக்கவில்லை. இராணி வேலுநாச் சியார்க்கே மருதுவின் அதிகாரப்போக்கும் செல்வாக்கும் பிடிக்காமல் தன்னுடைய பெயரை நிலைநாட்ட நவாப்பின் உதவியை நாடிய காலத் தில் பெரியமருதுவின் செல்வாக்கும் படைபலமும் இராணியின் இம் முயற்சியை முறியடிக்கத் துவங்கிய காலத்தில்[14] இச்சுவடி வெளியிடப் பட்டிருக்கின்றது. இக்குழப்பமான சூழ்நிலையால்தானே என்னவோ இச்சுவடியில் பெரியமருதுவும் சின்னமருதுவும் மாரநாட்டுத் திசைக் காவலராகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர்.

இதனல் கி.பி. 1773-இல் இருந்து வேலுநாச்சியாருக்கு சிவ கெங்கை ஜமீன் சொந்தமாயிற்று. பெரிய மருதுவும் அன்றிலிருந்து சிவகெங்கை ஜமீன் முழுவதற்கும் பாத்தியபட்டவராக விளங்கினர் என்று கூறும் பெரிய மருதுவின் மரணவாக்குமூலம் ஐயப்பாட்டிற் குரிய ஒன்ருகத் தோன்றுகிறது.

இதுகுறித்து முடிவுகள் எப்படி இருந்தபோதிலும், சேர்வைக் காரராய் இருந்த பெரிய மருது சிவகெங்கைச் சீமை தோன்றுவதற்குக் காரணமாயிருந்த ஒரு மறவர்குல அரசனின் மறைவிற்குப் பிறகு, அவரைப்போற்றி-இறந்த அவரது ஆன்மா சாந்திபெற்று புண்ணியம் பெற தஞ்சாக்கூர் காவேரி அய்யனர்க்கு இத்தர்ம சாதனப்பட்டயம் வழங்கியுள்ள செயலை எண்ணிப்பார்க்காமல் இருக்கமுடியாது.

---

1 இவ்வோலைச்சாசனம் அனுமந்தக்குடி சமணக்கோயில் குருக்கள் திரு. சாந்த ராசன் என்பாரிடம் உள்ளது. களஆய்வின்போது கண்டறியப்பட்டது.

2 தமிழ்நாடரசு தொல்பொருள் ஆய்வுத்துறை பதிவு அலுவலர் திரு மா. சந்திர மூர்த்தி அவர்களுடன் களவாய்வுக்குச் சென்றபோது கண்டுபிடிக்கப்பட்டது. உடனிருந்தவர் கீழடி உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் திரு. பாலசுப்ரமணி யம், திருவாசகம் முதலியோர் ஆவார்கள்.

3 சோமலே, அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம் மகாகும்பாபிஷேக மலர், முதற்பகுதி C. 83-84 ஜூலை 1975

4 சஞ்சிவி, மருதிருவர் பக். 49, பாரிநிலையம் வெளியீடு 1968

# தைலாபுரம்

இரா. ப. கருணானந்தன், எம்.ஏ.,
அருங்காட்சியகக் காப்பாளர்,

**காசுகள்**

திருவில்லிபுத்தூர் வத்திராயிருப்பு பகுதியிலுள்ள ஊர் தைலாபுரம். ஊருக்கு மேற்கேயுள்ள காட்டில் சுமார் 400–ஆண்டு பழமையுடையது எனத் தக்க பானை ஓடுகள் சிதறிக் கிடக்கின்றன. அங்கு முன்பு செம்புக் காசுகள் பல எடுக்கப்பட்டன. தைலாபுரம் புலவர் திருப்பதி என்பவர் மேற்படிப் பகுதியில் தமது பாட்டியின் நிலத்தில் களை முதலியன எடுக்கும் பொழுது வெளிப்பட்டு சேகரித்து வைத்த செம்பு காசுகளை (பெரியது 6, சிறியது 45) இத்துறைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார். அக்காசுகளில் சில சுந்தரபாண்டியன் காலத்தனவயாகவும், சில நாயக்கர் காலத்ததாகவும் காணப்படுகிறன.

**சோழ நாயக்கன் கிணறு**

தைலாபுரத்திலிருந்து எலந்தைக்குளம் செல்லும் வழியில் சாலைக்கு வடக்கே பழைய காலத்து கல் கிணறு ஒன்று உள்ளது. மக்கள் இதனை சோழ நாயக்கன் கிணறு என்று அழைக்கின்றனர்.

**குரக்கமேடு**

தைலாபுரத்திற்கு அருகிலுள்ள எலந்தைகுளத்திற்கு வடக்கே சுமார் 2 கி.மீ. தொலைவில் தலைமலையாண்டி ஆற்றின் மேற்குக் கரையில் குரக்க மேடு என்று ஒன்றுள்ளது. அங்கு சுமார் 1500 ஆண்டுகளுக்கு முந்தைய முதுமக்கள் தாழிகளின் சிதைவுகளும், ஒன்றிரண்டு கற்குவைகளும் காணப்படுகின்றன. கல் கட்டிடத்தின் அடிப்பகுதி போன்றதொரு அமைப்பு காணப்படுகிறது. கருப்பு சிவப்புப் பானை ஓடுகள், கருப்பு பானை ஓடுகள் முதலியனவும் நுண் கற்கால கருவிகள் சிலவும் சேகரிக்கப் பட்டுள்ளன.

---

5 S. Kadhirvel, The History of Maravas p. 166. Madurai publishing House 1977.

6 மருதிருவர்-பக். 42

7 கொன்ற என்று இருத்தல் வேண்டும்.

8 அய்யணம்பலம்.

9 Ibid p. 26

10 Nelson's Madura Country p. 249

11 ராய என்று படிக்கவும்,

12 அன்னியக் குடி

13 பாஞ்சாலங்குறிச்சி வீரசரித்திரம்-இரண்டாம்பாகம்-பக். 328-31.

14 The History of Maravas pp. 178-179

# வீரபத்திர துர்க்கம்

புலவர் செ. கோவிந்தராசு, M.A.
பாப்பாரப்பட்டி

முன்னுரை

தகடூர் நாடு ஒரு சிற்றரசாக இருந்தாலும் பல சிறப்புக்களை பெற்றிருக்கின்ற பேருண்மையை இன்று காணமுடிகின்றது. பழங் காலம் முதல் புதிய கற்காலம் வரை இந்நாட்டுக்கு வரலாற்று ஆதாரங் கள் நிரம்ப உண்டு. பலவகையான வீரம் பேசும் நடுகற்களும் கோயில் களும், கோட்டைகளும், கல்வெட்டுக்களும் செப்புப் பட்டயங்களும் ஓலைச் சுவடிகளும், இலக்கியச் சான்றுகளும் ஊர்கள் தோறும் காண முடிகின்றது. அவைகளில் ஒன்று மிகச் சிறப்பு வாய்ந்த வீரபத்திர துர்க்கம் என்னும் கோட்டையாகும்.

வீரபத்திர துர்க்கம்

பாராமகால் என்று சொல்லக்கூடிய 12 கோட்டைகளில் இது ஒரு சிறந்த மலைக்கோட்டையாகும். இது சிறந்த தலைநகராகவும் இருந் திருக்கின்றது. இதன் உயரம் 3038 அடி. இது முன்காலத்தில் இட்டிகல் துர்க்கம் என்று அழைக்கப்பட்டது. பாலக்கோடு இராயக்கோட்டை செல்லும் நெடுஞ்சாலையில் 8-வது கி.மீ. இல் உள்ள பிக்கன அள்ளி என்ற கிராமத்திலிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் மிக உயர்ந்து நிற்கின்றது. பிக்கன அள்ளியிலிருந்து ஒற்றையடிப் பாதை வழியாக வயல்களைக் கடந்து ஒரு சிறிய பாலத்தையும் கடந்து சென்றால் கோட்டையின் அடிவாரத்தில் ஒரு பாழடைந்த கோவிலை அடையலாம். கோயிலைச் சுற்றி சரிந்து போன மதில் சுவரும், வெளிப் பிரகாரத்தில் இடிந்த மண்டபம் ஒன்றும், அதை மறைக்கும் அளவிற்கு முட்புதரும் மண்டிக் கிடக்கின்றது. கோவிலின் பின்புறம் ஒரு அரசனைப் போன்ற உருவ முள்ள, அழகாகச் செதுக்கப்பட்ட சிற்பம் உடைந்த நிலையில் கிடக் கின்றது. கோவிலின் நுழைவாயிலில் பழைய உடைந்துபோன கதவு ஒன்று பாதி மண்ணில் புதைந்து நம்மை வரவேற்கின்றது. உள்ளே கோயில் மண்டபத்தின் ஒரு பகுதி சரிந்து பாழடைந்துள்ளது. ஒரு பகுதியில் அம்மண்டபம் அப்பகுதியில் வசிக்கும் விவசாயிகளுக்கு மாடு கட்டும் கொட்டகையாகப் பயன்படுகின்றது. மூன்றும் வாயிலை மிகவும் சிரமப்பட்டு அடையமுடியும். கடும் இருட்டினூடே மூலஸ்தானத்திற்குள் நுழைகின்றபோது நமக்குக் கிட்டற்கரிய ஒரு காட்சியைக் காணமுடிகிறது. காணக் கண் கோடி வேண்டும் என்று கூறுவார்களே அதைப் போன்ற ஒரு நிலையும் மெய் சிலிர்ப்பும்

ஒரு புல்லரிப்பும் ஏற்படுகிறது. காரணம் அங்கே எழுந்தருளியுள்ள மூலவரே. மூலவர் பெயர் சென்னகேஸ்விரபெருமாள் என்று வழங்கப்படுகிறது. சென்றாய சுவாமி என்றும் அழைப்பார்கள். அதி அற்புதமான ஒரு அழகிய கலைச் சின்னம் கற்பனைக்கும் எட்டாத அளவில் படைக்கப்பட்டுள்ளது. அங்கே எழுந்தருளிய இறைவனின் கம்பீரத் தோற்றம் ஒரே கல்லில் சுமார் 7 அடி உயரம் உடையவராகச் சங்கு சக்ராதிபதியாக, அடியில் பெரிய பீடத்தின் மேல் நின்ற நிலையில் காட்சி தருவது கண் கொள்ளாக் காட்சியாகும். அதைப் பார்த்த உடனே

"பச்சைமா மலைப்போல் மேனி பவள வாய் கமலச் செங்கண்"

என்ற பாசுரம்தான் நம் நினைவுக்கு வருகின்றது. திருவேங்கட மலையில் எழுந்தருளியுள்ள வேங்கடவனைப் போல சற்றேறக்குறைய மூன்று மடங்கு உயரம். தத்ரூபமாக சர்வ இலட்சணங்களோடு காட்சியளித்து நம்கண்களில் கண்ணிர் துளிக்கச் செய்கின்றது.

இடைமண்டபத்திலே ஒரு மேடையின் மேல் அனந்தலட்சுமி ஆனந்தமாக வீற்றிருக்கிறாள். அவளின் அங்க அடையாளங்கள் அணிந்துள்ள அணிகலன்கள் ஆகியவற்றை வருணிக்க வார்த்தைகள் கிடையாது. ஒரு பக்க மேடையிலே நவகிரகங்கள் விழுந்து கிடக்கின்றன. இக்கோவிலின் கலை நுணுக்கங்களைக் கண்ணுறும் போது கி.பி 14 அல்லது 15-ம் நூற்றாண்டில் தகடூரை ஆண்ட விசயநகர மன்னர்களின் காலமாகலாம் என்று கருதப்படுகின்றது. கோயில் கோபுரம் சுதையால் கட்டப்பட்டு செடி கொடிகள் வளர்ந்து காட்சியளிக்கின்றது. கோயிலுக்கருகில் ஒரு கிணறு உள்ளது. அதன் அமைப்பைப் பார்க்கும் போது அக்கோயிலின் குளம் போலக் காட்சியளிக்கிறது. கோயிலைச் சுற்றிலும் வயல்களும் தோட்டங்களும் உள்ளன. சிலர் குடிசைகளைக் கட்டிக் கொண்டும் வாழ்கின்றனர். கோயிலின் பின்புறம் சுமார் 1 கி.மீ. தொலைவில் பத்து பதினைந்து குடிசைகள் உள்ளன. அதைச் 'சந்தைப் பேட்டை' என்று வழங்குகின்றனர். அதன் அருகில் பழைய ஊர் இருந்ததற்கான தடயங்கள் உள்ளன. அவ்வூர் மக்களை அக்கோயில் பற்றி விசாரிக்கும் போது "ஆண்டு தோறும் புரட்டாசி மாதம் ஒவ்வொரு சனிக்கிழமையிலும் மக்கள் வந்து சென்றாயப் பெருமாளுக்கு பொங்கலிட்டு தரிசித்து விட்டு செல்வார்கள். மாதத்தில் ஒரு சனிக்கிழமை மட்டும் ஒரு பூசாரி வந்து சுவாமிக்குப் பூசை செய்து விட்டுச் செல்வார் என்றும் திருப்பதி மேல் மலையில் வெங்கடேசப் பெருமாள் எவ்வளவு சக்திவாய்ந்தவரோ அந்த அளவுக்கு இங்கே சென்றாய பெருமாள் மிகவும் சக்தி வாய்ந்த இறைவன்" என்றும் கூறினார்கள். இப்படிப்பட்ட பெருமைக்குரிய சுவாமி இடிந்த கருவறையில் நின்ற வண்ணமாகக் காட்சியளிப்பதும் பலகலைகள் நிரம்பிய தேவி அமர்ந்த வண்ணமாகக் காட்சியளிப்பதும் நெஞ்சை நெகிழ வைக்கும் காட்சியாகும். அது என்று வெளிஉலகுக்குத் தெரிந்து பூசையும்

மணி ஓசையும், சுப்பிரபாத இன்னிசையும் கேட்குமோ அந்த நாளை எதிர்பார்த்து ஏங்கிற்று என் உள்ளம்.

அங்கிருந்து மலைக்கோட்டைக்கு ஒற்றையடிப் பாதை வழியாக சுமார் ½ கி.மீ. நடந்து சென்றால் மலையடிவாரத்தில் பல சமாதிகளுக்கு கற்கள் நடப்பட்டிருக்கிற காட்சியைக் காணலாம். இது இஸ்லாமியர்களின் கற்களாகத் தெரிகிறது. அந்த சமாதிகளெல்லாம் இந்த மலைக் கோட்டையில் நடந்த சண்டையில் இறந்து பட்ட வீரர்களுக்காக அமைத்தவையாகும். அங்கே ஒரு நடுகல் காணப்படுகிறது. போர்க்களத்தில் தன்கணவன் இறந்த பின் தானும் உயிர் வாழாது அவனுடனே மாண்ட வீரப் பெண்மணிக்காக நாட்டப்பட்ட காட்சி அங்கே தெரிகிறது. அதைச் சதிக்கல் என்று வழங்குவார்கள்.

அடுத்து மலைக்குப் போகும் வழி தெரிகிறது. அதன் பாதை கற்களால் பாவப்பட்டு மேல் நோக்கிச் செல்கிறது. மலையைச் சுற்றி ஏழு அரண் கல் சுவரால் கட்டப்பட்டுள்ளது. தற்போது அவை பழுதடைந்திருந்தாலும், புதர்கள் மண்டிக் கிடந்தாலும் அரணின் அமைப்பு அழகாகத் தெரிகின்றது. சுற்று அரண் 6 கி.மீ. அளவு கொண்டதாக இருக்கும். ஒவ்வொரு அரணுக்கும் உள்ள நுழைவு வாயிலில் ஒரு ஓய்வு மண்டபம் காணப்படுகிறது. கல்தூண்கள் நடப்பட்டு கதவுகளும் இருந்த அடையாளம் காணமுடிகிறது. நடைபாதைக்கு அருகேயே சாய்வாக ஒரு பாதை போவது தெரிகிறது. ஏழு நுழைவாயில்களில் மூன்றாவது நுழைவாயில் மண்டபத்தைத் தவிர மற்றவை பழுதடைந்துவிட்டது. இறுதி நுழைவாயில் தூண்கள் இருபுறமும் மிக உயரமாக ஒரே கல்லால் நிறுத்தப்பட்டு இருக்கிறது. அதில் தாழ்ப்பாள் போட கல்லில் 9 அங்குலம் பக்கமுள்ள சதுர அமைப்பில் ஒரு முழ ஆழத்திற்கு துளை போடப்பட்டுள்ளதைப் பார்க்கும் போது கதவின் பருமனும் தாழ்ப்பாளின் பருமனும் நன்கு தெரிகிறது ஆயின் அங்கே கதவு இல்லை. இந்த வழியைத் தவிர வேறு எந்த வழியாகச் சென்றாலும் கோட்டையை அடைய முடியாதபடி இயற்கை அரண் காத்து நிற்கிறது.

கோட்டையின் மேல் தளத்தில் தற்போது விவசாயம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு பகுதியில் இரு பெரிய தானியக் களஞ்சியங்கள் உள்ளன. கோட்டையின் மத்தியில் ஒரு அம்மன் கோயில் மண்டபமும் அதற்கு அருகில் கோயில் மண்டபமும் உள்ளன. அதில் வீரபத்திர சுவாமி கையில் கத்தியோடு நின்ற நிலையில் காட்சியளிக்கிறார். அதனால் தான் இக்கோட்டைக்கு வீரபத்திர துர்க்கம் என்ற பெயர் இருந்து வருகின்றது. அதன் அமைப்பைப் பார்க்கின்ற போது அது பிற்காலத்தில் கட்டப்பட்டதாகக் கருத வாய்ப்புண்டு. கோயிலில் எந்தவிதமான கல்வெட்டும் இல்லை. ஆனால் கோயிலின் பின்புறமுள்ள ஒரு பாதையில் ஒரு தெலுங்குக் கல்வெட்டு காணப்படுகிறது. அது சரிவான இடத்தில் இருப்பதால் அதைப்

படித்து புரிந்துகொள்ள முடியவில்லை. கோயிலின் பின்புறம் சுமார் 50 மீட்டர் தூரத்தில் ஒரு பெரிய நீர் சுனை உள்ளது. அதற்கு இராம இலட்சுமி சுனை என்று பெயர். அதன் நீளம் சுமார் 120 அடி இருக்கும் அந்த நீர் சுனையில் எந்த வறட்சியிலும் நீர் வற்றுவதில்லை. சுனைக்கு எதிர்ப்புறம் இரு பாறைகளுக்கிடையில் சுதையால் ஒரு மறைவிடமும் கட்டப்பட்டு காட்சியளிக்கின்றது. அதுவும் இன்று பழுதுபட்டு காணப்படுகின்றது. அங்கிருந்து பாறைமேல் கால் வைப்பதற்கு மட்டும் வெட்டப்பட்டுள்ள பாதை. பாறைமீது ஏறிச்சென்றால் அங்கே ஒரு நீர் சுனை காணப்படுகிறது. அதன் மத்தியிலே மிகவும் வலிமை வாய்ந்த சுவரால் அமைக்கப்பட்ட இரண்டு வெடிமருந்து கிடங்குகள் உள்ளன.

அவை இன்று வரையிலும் எவ்வகை பழுதும் இல்லாமல் நல்ல முறையில் உள்ளன. அங்கிருந்து எதிரே 50 அடி உயரமுள்ள பெரிய பாறை. அதன் மீது ஏற சிறிய பாதை இருந்தாலும் செல்வது ஆபத்தாக உள்ளது. அந்த பாறையின் மத்தியில் ஒரு அடி உயரம் நான்கு அடி சதுரத்திற்கு சுதையால் ஒரு மேடை அமைக்கப்பட்டு அதன் மத்தியில் கொடி மரத்திற்காக ஒரு இரும்புகுழாயும் முரசுவைப்பதற்கான இடமும் உள்ளன. இதையெல்லாம் பார்த்துவிட்டு கீழிறங்கி கிழக்கு நோக்கி 3 கி.மீ. சென்றால் பாழடைந்த இரு சிறிய கோயில்களைக் காணலாம். அதில் ஒரு சிவலிங்கம் எண் கோண வடிவில் உள்ளது. அந்த சிவலிங்கத்தை யாரோ சிலர் புதையல் இருப்பதாகக் கருதி பெயர்த்திருக்கின்றார்கள் அருகிலுள்ள மற்றொரு கோயிலில் மிகுந்த வேலைப்பாடு அமைந்த உமை யம்மை நின்ற நிலையில் காட்சியளிக்கிறாள். அணிகலன்கள் நுண்ணிய கலைத்திறன் கொண்டது. ஆனால் அம்மனின் மூக்கும் கையும் உடை பட்டு கேட்பாரற்று கிடப்பது மனதுக்கு பெரும் வருத்தத்தை கொடுக் கின்றது.

இக்கோட்டை இட்டி பால்மன்னர்களின் தலைநகராக இருந்திருக் கிறது. பின் ஜெகதேவராயன் என்ற மன்னன் பெனுகொண்டாவி லிருந்து வந்து தன்னுடைய மக்கள் பன்னிருவருக்கு பன்னிரண்டு கோட்டைகளை நிர்மாணித்ததாகக் கூறுவர். அதுவே பாராமகால் கோட்டைகளாகும். இந்த வீரபத்திர துர்க்கத்தில் ஜெகதேவராயன் வீரபத்திரர் ஆசியுடன் ஜெயக்கொடி நாட்டி நல்லாட்சி செய்தான். முகமதிய மன்னனை திப்பு சுல்தானால் தோற்கடிக்கப்பட்ட ஜெகதேவராயன் மனமுடைந்து தன்னுடைய அணிகலன்கள் பொக்கிஷம் முழுவதையும் மலைமேலுள்ள இராமலட்சுமி சுனையில் போட்டுவிட்டு தானும் விழுந்து தற்கொலை செய்து கொண்ட தாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். நல்ல பாதுகாப்பும், அரண் அமைப்பும் கொண்டதால் ஹைதர் அலியும், திப்புவும் தங்களுடைய படைகளை இங்கே வைத்துப் பாதுகாத்ததாகத் தெரிகிறது. பின்

20-7-1791-ல் மேஜர் கௌடி இராயக் கோட்டையைத் தாக்கி வெற்றி கண்டபோது கேப்டன் ரி என்பவரால் இது கைப்பற்றப்பட்டது.

முடிவுரை

1802-ல் இது தாலுக்கா தலைநகராக இருந்துள்ளது. இன்று காடுகளும் புதர்களும் மண்டி கிடக்கும் ஒரு முல்லை நிலமாகத் திரிந்துள்ளது. இவ்வளவு வனப்பு மிகுந்த இக்கோட்டை மேலும் அழியாமல் பாதுகாக்கவும், அடிவாரத்தில் உள்ள சென்றாய சுவாமி கோயிலைப் பழுது பார்த்து அருளுடை பெருமாளையும், கருணையுடைய அம்மனையும் அனைவரும் தரிசிக்கவும் முயற்சிப்பது நம் கடன்.[1]

1 இந்த அரிய இடங்களைக் காண பெரிதும் உதவி புரிந்து விளக்கியவர் திரு. ப. துரைசாமியாவார்கள். இந்த ஆய்வில் என்னோடு திரு. மு. மாாணிக்கம் திரு. வேட்ராயன், திரு. இரா. துரைசாமி ஆகியோர் வந்திருந்தனர். அனைவருக்கும் எனது நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.



வீரபத்திரர், ஆயிரங்கால் மண்டபம்,
மீனாட்சியம்மன் கோயில், மதுரை.
கி. பி. 17–ஆம் நூற்றாண்டு

# தனியாணை விட்டான்

வித்வான் வே. மகாதேவன்
திருப்பனந்தாள்

சைவசமய குரவர் நால்வருள் முதல்வர் திருஞானசம்பந்தர் ஆவார். இவர் தமது திருமுறையுள் நான்கு இடங்களில் ஆணையிட்டுப் பாடியுள்ளார். இத்திறம் கண்டு மகிழ்ந்த நம்பியாண்டார் நம்பி 'ஆணை நமதென்னவலான்' எனத் திருஞானசம்பந்தரைக் குறிப்பிடுவார். இதனை,

'முத்திப்பகவன் முதல்வன் திருவடியை
அத்திக்கும் பத்தரெதிர் ஆணைநம தென்னவலான்'

என வரும் ஆளுடைய பிள்ளையார் திருத்தொகையால் அறியலாம். இப்பெயர் போலவே கல்வெட்டுக்களில் காணப்படும், 'ஆணைநமதென்ற பெருமாள்' என்ற பெயரும் திருஞானசம்பந்தரைக் குறிப்பது என வரலாற்றாய்வாளர் கருதுவர்.[1] புதுக்கோட்டைக் கல்வெட்டுக்களில், 'குடியுடையான் ஆணைநமதென்றபெருமாள்'[2] 'மாணிக்கவாசகன் ஆணைநமதென்ற பெருமாளான கோயில் வாசகப்பிச்ச முதலியார்'[3] என்றபெயர்கள் காணப்படுகின்றன. ஆணைநமதென்ற பெருமாள் என்ற பெயரைத் தவிர 'ஆணைநின்ற வயிராகி',[4] 'ஆணையரசாண்டான்'[5] தனியாணை விட்டான்[6] என்ற ஆணையொடு தொடர்புடைய பெயர்கள் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. இப்பெயர்களுள் 'தனியாணைவிட்டான்' என்பவன் பெயரால் ஓரூரும், ஒரு சந்தியும் நிலவியமையை ஒரு கல்வெட்டு உணர்த்துகிறது. 'தனியாணைவிட்டான்' என்ற சிறப்புப் பெயர் பற்றி ஆராய்தல் இக்கட்டுரையின் நோக்கம்.

### மூன்றும் குலோத்துங்கனின் மெய்க்கீர்த்தி

மூன்றும் குலோத்துங்கன் கி.பி. 1178 முதல் 1218 வரை ஆண்ட சோழப் பேரரசன் ஆவான். மதுரையும் ஈழமும் கருவூரும் பாண்டியன் முடித்தலையும் கொண்டவன். இவனுடைய நீண்ட பெரிய மெய்க்கீர்த்தி, புயல்வாய்த்து மண்வளர' எனத்தொடங்குவதாகும். இம்மெய்க்கீர்த்தி, புதுக்கோட்டைப் பகுதித் திருமையம் தாலுகா குடுமியாமலை, சேரனூர் ஆகிய கல்வெட்டுக்களில் மட்டும் கிடைக்கிறது.[7]

### வடநாட்டுப்போர்

மூன்றும் குலோத்துங்கனின் வடநாட்டுப் போரினை மேற்கண்ட கல்வெட்டுகளும் கூறுகின்றன. தெலுங்கச் சோழர் நல்லசித்திரசன், தம்முசித்தியரையன், திருக்காளத்தி தேவன் ஆகிய இக் குலோத்துங்கன் காலச் சிற்றரசர் இவ்வேந்தனுக்கடங்கியே வாழ்ந்தனர். மூன்

றும் குலோத்துங்கனுடைய திருவரங்கக் கல்வெட்டு வடநாட்டுப் போரில் கோபம் தணிந்து காஞ்சியில் திறை பெற்றதாகக் கூறுகிறது.[8] தெலுங்கச் சோழன் புசபலவீர நல்ல சித்தன தேவமகராசன் காஞ்சியில் இருந்து தான் கப்பம் பெற்றதாகக் கூறிக் கொள்கிறான். இந் நல்ல சித்தனைச் சோழன் கி.பி. 1194-1197க்கு இடையில் வென்றிருத்தல் வேண்டுமென்று அறிஞர் சதாசிவ பண்டாரத்தார் குறிப்பிடுகின்றார்.[9] 'வடமன்னரைத் தறைப்படுத்து முனிவு ஆறிக் காஞ்சிபுக்கு முழு தரைசையும் திறை கவர்ந்து' என்பது கல்வெட்டுப் பகுதி.

**உறந்தை வென்றகோ :**

குடுமியாமலை, சேரனூர்க் கல்வெட்டுக்கள், 'வடநாட்டு வேந்தரை வென்று, வேங்கி நாட்டைக் கைக் கொண்டு உறந்தை என்னும் பொன்னகர்ப் புகுந்தான்' எனக் குறிக்கின்றன. வேங்கி நாட்டில் இவ்வரசன் கல்வெட்டுக்கள் இல்லாததால் இவன் வேங்கியை வென்றிருக்க வியலாது. இவ்வெற்றி, கி.பி. 1199-ல் பட்டம் பெற்ற காகதிய அரசன் கணபதியை வென்று புறங் காட்டச் செய்ததாகலாம். உறந்தை அடையாளம் தெரியவில்லை என்பர் திரு. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள்.[10] காகதீய கணபதியின் ஓரங்கலே உறந்தை என்பர் சிலர்[11].

**தனியாணை விட்டானுமை செய்தமை**

மூன்றும் குலோத்துங்கனின் மேற்குறித்த வடநாட்டுப் போர் பற்றிக் குறிக்கும் போது,

> 'தனியானை விட்டானுமை செய்து வட மன்னரைத் தறைப்படுத்து
> முனிவாறி [காஞ்சிபுக்]கு முழுதரைசையும் திறை கவர்ந்து
> தாங்கரும் போர் வடுகைவென்று வேங்க மண்டலம் தனதாக்கி
> பொன் மழை பெய்துறந்தை என்னும் பொன்னநர் புருந்தருளி'

எனக் குடுமியா மலைக் கல்வெட்டும்.

> 'தநியா — — — ட்ட — — மை செய்து'

எனச் சேரனூர்க் கல்வெட்டும் குறிப்பிடும். தனியாணை விட்டானுமை செய்து என்பதனைத் 'தனியாணை விட்டாண்மை செய்து' எனக் கொள்வர் சதாசிவபண்டாரத்தார்.[12] 'வட நாட்டுப் போரின் முன் தனியாணை ஒன்று போக்கிப் பின்னர் வடவரசரை வென்றான்' என்பது இதன் பொருள்.

கி.பி. 1192-ல் பாண்டியரோடு மூன்றும் குலோத்துங்கன் போரிடுங்கால் நல்லசித்தி கப்பங் கட்ட மறுத்தனன் போலும். அப்பொழுது சோழன் 'தனியாணை' போக்கியவனுதல் கூடும். தனியாணை போக்கிய பின் வடநாட்டுப் போர் நிகழ்ந்ததாதல் வேண்டும் [ஆணை-ஸ்ரீமுகம்

திருமுகம், ஓலை] இந்நிகழ்ச்சியை ஒட்டி இவனுக்குத் தனியாணை விட்டான் என்ற பெயர் வழங்கி வந்தது ஆதல் கூடும். வடநாட்டுப் போரை விளக்கும் சான்றுகள் பிறவும் கிடைத்ததும் இக் கருத்துத் தெளிவடையும்.

**தனியாணை விட்ட நல்லூர் : சந்தி :**

திருபுவனச் சக்கரவர்த்திகள் சடையவர்மன் சுந்தரபாண்டியனுடைய வாளவர் மாணிக்கம கைலாச நாதர் கோவிலில் உள்ள கல் வட்டு[10] தனியாணை விட்ட நல்லூர், தனியாணை விட்ட சந்தி பற்றிக் கூறுகிறது.

தனியாணைவிட்டான் சந்தியான திருப்பள்ளி எழுச்சிச் சந்தி நடத்த அமுதுபடி முதலியவற்றுக்காக வாளவர் மாணிக்க மதங்கரில் மடையன் தென்னைண்டானைக்குக் 'கொற்றங்குடிக் குளத்தால் நீர்பாயும் நடுவற வெட்டுவானான தனியாணைவிட்ட நல்லூரை', அரசு புத்தன் சாமந்தன் ஆகிய வாணதராயனும் நாட்டவரும் கல்நாட்டி நிலப்பிரமாணம் செய்து தந்தனர்.

திருவாதவூர் நயினார் தேவதானம் 2 மா அரை, மண்டலபுருஷர் தன்மதானம் 1-மா, பூவாண்டார் முதலியார் மடப்புறம் 1-மா. ஆக நிலம் நாலரை மாவும் நீங்கலாகத் தனியாணை விட்ட நல்லூர் முழுமையும் அளிக்கப் பெற்றது.

மடையன் தென்னுண்டான் எல்லாக் கடமைகளும் இறுத்து, உய்யக் கொண்டார் குறிச்சியில் அளக்கும் மரக்கால் சிகையிலாத முடையானால், நெல் அறுபது கலமும் பணம் இருபதும் தருதல் வேண்டும் மாசிமாதம் முதல் நாள் முதல் நாளொன்றுக்குச் செம்பாலே குறுணியரிசி, கறியமுது முதலானவற்றுக்கு வேண்டுவனவும் கொண்டு கோவில் நிர்வாகத்தார் சந்தி நிகழ்த்துவிக்க வேண்டும்.

இக்கல்வெட்டால், தனியாணைவிட்ட நல்லூர் என ஓரூரும், தனியாணைவிட்டான் பேரில் சந்தியும் நிகழ்ந்தமையை அறியலாம்.

**புத்தன் தனியாணை விட்ட தேவன் :**

கி.பி. 1308-க் குரிய முதல் மாறவர்மன் குலசேகர பாண்டியனின் நாற்பதாவது ஆட்சியாண்டுக்குரிய வாளவர் மாணிக்கம் கல்வெட்டில்[11], புத்தன் தனியாணைவிட்ட தேவன் தற்குறி மாட்டெறிந்தமை புகல சிகையிலாத முடையான் என்பவன் கையொப்பமிட்டுள்ளான்.

**தொகுப்புரை**

சில கல்வெட்டுக்களில் மட்டும் விளக்கப் பெறும் மூன்றும் குலோத்துங்கனுடைய வடநாட்டுப் போரின் முன் தனியாணை போக்கப்

பெற்றது. எனவே இவனுக்குத் 'தனி யானை விட்டான்' என்ற சிறப்புப் பெயர் வழங்கி இருத்தல் கூடும். இப்பெயர் மக்களிடையே வழங்கி வந்தமையை, இவனுக்குப் பிற்பட்ட மேற்கண்ட பாண்டியர் கல்வெட்டுக்கள் சில காட்டுகின்றன.

---

1 திருப்பனந்தாள். கா.ம. வேங்கடராமய்யா. M.A. இலக்கியக்கேணி, ஆனை நமதே. பக் 48-55 காண்க.
2 Inscriptions of The Pudukkottai State No. 271
3 Ibid. No. 393 4 Ibid. 437 5 Ibid. 624 6 Ibid. 492
7 Ibid. No 163 and 166. 8 S.I.I. Vol III, No. 88
9 பிற்காலச் சோழர் வரலாறு. Part II. p. 153-154
10 Ibid. p. 156-157 11 The Colas, Part II, p. 142
12 பிற்காலச் சோழர் வரலாறு, Part. II p. 234
13 Inscriptions of Pudukkottai State, No. 492 14 Ibid. No. 418

---

## இராஜேந்திரன் விழா

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, திருச்சி மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரத்தை அடுத்துள்ள மாளிகை மேட்டில் அகழ்வாய்வு செய்து வருகிறது. அகழ்வாய்வில் சோழப் பேரரசன் முதலாம் இராஜேந்திரன் அமைத்து வாழ்ந்த அரண்மனையின் சுவர்ப் பகுதிகளும் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கலைப்பொருட்களும் கிடைத்துள்ளன.

மாளிகைமேட்டைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து சேகரித்து வந்த சோழர்காலச் சிற்பங்கள், கல்வெட்டுக்கள் மற்றும் அகழ்வாய்வில் கிடைத்த கலைப்பொருட்கள் ஆகியவற்றைக் கொண்டு அங்கு ஒரு காட்சியகமும் அமைக்கப்பட்டுள்ளது. மாளிகைப் பகுதிகளையும், அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்ட பொருட்களையும், மற்றும் காட்சியகத்தையும் காண்பதற்காக ஒவ்வொரு நாளும் மக்கள் திரளாக வந்து செல்கின்றனர். அருகாமையிலுள்ள பள்ளி மாணவர்களை அவ்வப்பள்ளி ஆசிரியர்கள் அழைத்து வந்து மாளிகைப் பகுதியினையும் காட்சியகத்தையும் காண்பித்து விளக்கம் கூறுகிறபோது மாணவர்கள் தெளிவு பெறுகின்றனர்.

முதலாம் இராஜேந்திரனின் மாளிகைப் பகுதிகளையும், சோழர் காலக் கலைப்பொருட்களையும் மக்கள் கண்டு களித்திடவும், அவை பற்றி தெளிவாகத் தெரிந்துகொள்ளவும் உதவும் வகையில் சென்ற மே மாதம் 16, 17, 18 ஆகிய நாட்களில் மாளிகை மேட்டிலேயே இராஜேந்திரன் பெருவிழா கொண்டாடப்பெற்றது. பகலில் கருத்தரங்கங்கள் நடைபெற்றன. அதில் பல்துறை அறிஞர்களும் பங்குகொண்டு சிறப்பு செய்தனர். இரவில் பல்வித கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

# சங்கரப்பாடியார்

நடன. காசிநாதன்

தமிழ் நாட்டுக் கல்வெட்டுக்களில் சித்திரமேழி பெரிய நாட்டார், வளஞ்சியர், பேரிளமையார், ஐஞ்சுவண்ணத்தார், மணிக்கிராமத்தார் போன்ற சில குழுக்களின் பெயர்கள் காணப்படுகின்றன. அதே போன்று 'சங்கரப்பாடியார்' என்ற ஒரு குழுவும் குறிக்கப்படுகிறது. இக்குழுவினர் யாவர்? இவர்களின் பணி என்ன? என்பதைப் பற்றி காண்போம்.

**சங்கரப்பாடியார் பற்றி வேறுபட்ட கருத்துக்கள்**

ஒரு நகரத்தில் சைவர்கள் வாழும் இடத்துக்கு வழங்கப்படும் பொதுவான பெயர் சங்கரப்பாடி என்பதாகும் என்று திரு. கிருஷ்ண சாஸ்திரி என்பார் கூறியிருக்கிறார்.[1] திரு. நீலகண்ட சாஸ்திரியார் தமது *'சோழர்'* என்னும் நூலில் சங்கரப்பாடியார் என்போர் கோயில்களில் விளக்குகளை நிர்வகிக்கும் பொறுப்பைப் பெற்றிருந்தனர் என்றும் குறிப்பாகக் கோயில் விளக்குகளுக்கு எண்ணெ அளிக்கும் பணியைச் செய்து வந்தனர் என்றும் கூறிவிட்டு, அவர்கள் ஒரு குழுவாகவும் வாழ்ந்திருக்கின்றனர் என்பதும் ஒரு சில கல்வெட்டுக்களால் புலனுகின்றன[2] என்று எழுதியுள்ளார். கோயில்களில் விளக்கேற்றும் பொறுப்பைச் சங்கரப்பாடியார் மேற்கொண்டிருந்தனர் என்பதைத் திரு. டி. வி. மகாலிங்கம் அவர்களும் ஏற்றுக்கொண்டிருக்கிருர்.[3] டாக்டர் நாகசாமி அவர்கள், மணிக்கிராமத்தார், நாநாதேசி போன்று சங்கரப்பாடியாரும் வியாபாரக் குழுவினர் என்று கூறியுள்ளார்.[4] திரு. கே. வி. சுப்பிரமண்ய அய்யர் அவர்கள் "சங்கரப்பாடியாரில் சிலர் நகர அமைப்பில் அங்கம் வகிக்கும் அளவில் இருந்திருக்கிருர்கள்; அவர்களில் சிலர் வியாபாரிகளாக விளங்கியிருக்கிருர்கள்; ஒரு குழுவாகவோ அல்லது ஒரு தனிக்குடியாகவோ வாழ்ந்திருக்கிருர்கள்; எந்த ஒரு செயலுக்கும் தங்கள் குடியைச் சேர்ந்த அனைவரும் பொறுப்பாளி என ஒட்டுமொத்தமாகக் கூறியிருக்கிருர்கள்" என்று எழுதியுள்ளார்.[5] திரு. கே. ஜி. கிருஷ்ணன் அவர்கள் சங்கரப்பாடியார் என்போர் எல்லா ஜாதி மக்களும் கலந்து வாழும் இடத்தில் (quarter reserved for mixed or confused castes) வசிப்போர் என்று கூறியுள்ளார்.[6] ஆனல் திரு. தி. ந. சுப்ரமண்யன் அவர்கள் சங்கரப்பாடியார் என்ற சொல்லுக்கு மிகத் தெளிவாகச் செக்கார், எண்ணெ வியாபாரம் செய்பவர் என்று பொருள் தந்திருக்கிருர்.[7]

சங்கரப்பாடியர்களைப் பற்றிக் கூறும் கல்வெட்டுக்களை ஆய்ந்து பார்க்கையில் திரு. தி. ந. சுப்ரமண்யன் அவர்கள் கூறும் கருத்து மிகவும் பொருத்தமானதாகத் தோன்றுகிறது. அதற்கு ஆதாரமாகப் பெரியபுராணத்தில் காணப்பெறும் திருவொற்றியூர் கலியரின் வரலாறும் துணை செய்கிறது.

**கலியரின் வரலாறு**

"தொண்டை நாட்டிலுள்ள திருவொற்றியூரிலே செக்கார் குலத்திலே கலியர் என்னும் சிவபக்தர் இருந்தார். "தயிலவினைத் தொழில் மரபில் சக்கரபாடித் தெருவிலே" வசித்து வந்த கலியருககு ஒற்றியூர் உடையாரிடம் அளவிலலாத பக்தி. இரவும் பகலும் எம்பெருமான் ஆலயத்திலே திருவிளக்கு ஏற்றிவைக்கும் பணிபுரிந்து வந்தார்.

தம்மிடம் கலியருக்கு உள்ள ஆழ்ந்த பக்தியை உலகோருக்கு எடுத்துக் காட்ட விரும்பினர் ஈசன். கலியர் செல்வம் கரைந்து சம்பாத்தியத்தைத் தேடவேண்டிய நிலை உண்டாயிற்று. தாம் எண்ணெய் ஆடி தம் எண்ணெயைக் கொண்டு விளக்கு எரிப்பது இயலாது ஆயிற்று. பிறரிடமிருந்து எண்ணெய் வாங்கிச் சென்று அதை விற்று அதன் மூலம் கிடைக்கும் லாபத்தைத் தம் திருப்பணியில் செலவிட்டு வந்தார்.

அவருடன் வியாபாரத்தில் பலர் போட்டியிடவே அந்த முயற்சியையும் கைவிட்டுவிட்டு 'சக்கர எந்திரம் புரியும் களனில் வரும்' பணிகளைச் செய்து கூலியாக எண்ணெய் பெற்று அதைக் கொண்டு ஆலயத்தில் விளக்கு எரித்து வந்தார். அதுவும் சின்னாளில் தடைபட்டது. பின்னர் தம் மனைவியை விற்று இறைவனது பணியை நிறைவேற்ற முனைந்தார். அவர்தம் இரக்கக் குணத்தை நன்கு அறிந்திருந்த அனைவரும் அவர் மனைவியை வாங்க மறுத்துவிட்டனர். எவ்வழியும் புலப்படாது போகவே தம் உடலிலே உள்ள இரத்தத்தைக் கொண்டு விளக்கெரிக்க எண்ணி கத்தி கொண்டு தம் கழுத்தை அறுக்கத் துணிந்தார். எம்பெருமான் சட்டென்று தோன்றி அவரது முயற்சியைத் தடுத்து அவரை ஆட்கொண்டு விட்டார்[8] என்று அவரது வரலாறு கூறப்படுகிறது.

கலியரின் வரலாற்றிலிருந்து சக்கரப்பாடியில் வசிப்பவர்கள் செக்காடுபவர்கள் (சக்கர எந்திரம்) என்பதும், அவர்கள் தம் எண்ணெய் கொண்டு கோயில்களில் விளக்கு எரிப்பவர்கள் என்பதும் தெள்ளத் தெளிவாகப் புலப்படுவதை உணரலாம்.

**நிகண்டுகள் தரும் விளக்கம்**

செக்கார்களுக்கு வேறு பெயராகச் சங்கரப்பாடியார் என்னும் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறதா என்று நிகண்டுகளைப் பார்த்தால்

சங்கரப்பாடியார் என்னும் பெயரே காணப்படவில்லை. சூடாமணி, நிகண்டு, ஆசிரியர் நிகண்டு, பிங்கல நிகண்டு, சேந்தன் திவாகரம் ஆகிய எல்லாவற்றிலுமே செக்கார் என்பதற்குச் சக்கிரி, நந்தி என்னும் வேறு பெயர்களே தரப்பட்டுள்ளன.

### சக்கரம், சக்கரப்பாடி, சக்கிரி

மு. இராகவையங்கார் தம் 'இலக்கிய சாஸன வழக்காறுகள்' என்னும் நூலில் சங்கரப்பாடி என்பது 'சக்கரப்பாடி' என்பதின் திரிபாகத் தோன்றுகிறது என்று கருத்துத் தெரிவித்துள்ளார்.[9] சக்கர எந்திரம் என்பது செக்கு என்ற பொருளிலும் அவ்வெந்திரத்தைப் பயன்படுத்துவோர் வாழும் இடம் சக்கரப்பாடி என்ற பொருளிலும் கலியர் புராணத்தில் கூறியிருப்பதை மேலே கண்டோம். மேலும் நம்பியாண்டார் நம்பி அருளிய திருத்தொண்டர் திருவந்தாதி,

'கும்பத் தயிலம் விற்றும் செக்குழன் றுங் கொள் கூலி
நம்பற் கெரித்த கலி ஒற்றி மாநகர்ச் சக்கிரியே'

என்று கலியரைச் 'சக்கிரி' என அழைப்பதால், சக்கரத்தைப் பயன்படுத்தியோர் சக்கிரி என்று அழைக்கப்பட்டிருக்கின்றனர் என்பதும் தெரியவருகிறது.

### கோயில் விளக்குகளுக்கு எண்ணெய் வழங்குவோர்

சங்கரப்பாடியார் பற்றி தெரிவிக்கும் பெரும்பாலான கல்வெட்டுகள் அவர்கள் கோயில்களில் விளக்குகளுக்கு எண்ணெய் வழங்கும் பொறுப்பைப் பெற்றிருந்ததாகவே காட்டுகின்றன.[10] உத்தரமேரூர்ச் சதுர்வேதி மங்கலத்து, வடக்கில் அங்காடியைச் சேர்ந்த சங்கரப்பாடியார் மன்னுபெரும் பழுவூரைச் சேர்ந்த சேந்தன் கணபதி என்னும் சூரசிகாமணி பல்லவரையன் என்பானிடம் 15 கழஞ்சு பொன் பெற்றுக் கொண்டு திருப்புலிவலத்து மஹாதேவர் கோயிலில் ஒரு நுந்தாவிளக்குக்கு ஒவ்வொரு நாளும் ஒரு உழக்கு எண்ணெய் வழங்குவதற்கு ஒப்புதல் தெரிவித்திருக்கின்றனர்.[11] முதலாம் பராந்தகச் சோழனுடைய 18-ஆம் ஆட்சி ஆண்டில் (கி.பி. 925) காஞ்சிபுரத்தை அடுத்துள்ள இரணஜயப்பாடி, ஏகவீரப்பாடி, வாமனசங்கரப்பாடி ஆகிய ஊர்களைச் சேர்ந்த சங்கரப்பாடியார் 20 கழஞ்சு பொன் பெற்றுக் கொண்டு ஒரு நுந்தாவிளக்கை நிர்வகிக்கும் பொறுப்பை மேற்கொண்டிருக்கின்றனர்.[12]

### ஒரு குழுவினர்

அவர்கள் ஒரு தனிக்குழுவாக விளங்கிவந்திருக்கிறார்கள் என்பது மற்றொரு கல்வெட்டினால் புலனாகிறது. சங்கரப்பாடியைச் சேர்ந்த 25 குடும்பத்தினர், இராஜேந்திர சோழப்பாடி என்ற புதிய

குடியிருப்பில் சென்று தங்கவேண்டும் என்றும் அவர்கள் 15 விளக்கு களுக்கு வேண்டிய எண்ணெயை வழங்க வேண்டும் என்றும் முதலாம் குலோத்துங்கன் (கி.பி. 1070-1120) ஆணை பிறப்பித்ததை ஒரு கல்வெட்டு உணர்த்துகிறது.[13] முதலாம் பராந்தகன் காலத்தில் குமாரமாத்தாண்ட புரத்துச் சங்கரப்பாடியார்கள் இருபதின் கழஞ்சு பொன் பெற்றுக் கொண்டு ஒரு நொந்தாவிளக்கினுக்கு ஒவ்வொரு நாளும் உழக்கு எண்ணெய் அளிப்பதாக உறுதியளித்திருக்கின்றனர்.[14] மற்றொரு கல் வெட்டு மூலம் அவர்கள் எண்ணெய் ஆட்டும் தொழிலை மேற்கொண்டி ருந்தனர் என்பதை "செக்கு ஒன்றுக்கு சங்கரபாடியார் பேர் பன்னிரண்டு ஆக" என்ற தொடரால் தெளிவாக அறிந்துகொள்ள முடிகிறது.[15]

### திருவிளக்குக் கொடை

சங்கரப்பாடியார்களுள் சிலர் கோயில்களுக்கு திருவிளக்குக் கொடை அளித்திருக்கின்றார்கள். திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் கோயிலில் காணப்பெறும் முதலாம் இராஜேந்திரன் (கி.பி. 1014-1044) காலத்தியக் கல்வெட்டு ஜயஙகொண்ட சோழ மண்டலத்துத் திருக் கழுக்குன்றமான உலகளந்த சோழபுரத்து ஸ்ரீமூலஸ்தானத்து உடை யார் தேசவிடங்க தேவர்க்கு ஆமூர்க் கோட்டத்து மாமல்லபுரமாகிய சனநாதபுரத்துச் சங்கரப்பாடியான் கொளம்பாக்கிழான் மாதேவன் எட்டி ஒரு திருநுந்தாவிளக்குக்காகத் தொண்ணூறு ஆடு அளித்ததை யும், அவ்வூரைச் சேர்ந்த மற்றொரு சங்கரப்பாடியான் தென்னவனடி விளக்கு அரைக்காக நாற்பத்தைந்து ஆடு அளித்ததையும் கூறுகிறது.[16]

### நகரத்தாரில் ஒரு பகுதியினர்

சங்கரப்பாடியார்கள் நகரத்தார்களுள் ஒரு பகுதியினராகக் கரு தப்பட்டு வந்திருக்கின்றனர். திருக்கழுக்குன்றத்தில் இருந்த நகரத் தாரில் வியாபாரிகள், சாலியர், சங்கரப்பாடியார் ஆகிய அனைவரும் இருந்திருக்கின்றனர்.

'ஜயங்கொண்ட சோழமண்டலத்து அதிராஜராஜக் கோட்டத்து களத்தூர் நாட்டு திருக்கழுக்குன்றமான உலகளந்த சோழபுரத்து நகரத்துக்குச் சமைந்த வியாபாரிகள் மகசங்கக் கொழுந்தும், உழதஞ் சூறையும்; சாலியந் ஆச்சங்கிட்டையும்; சங்கரபாடியான் அங்காடி எடுத்த பாதமும் மாறிவெண்ணுவலும் உள்ளிட்ட நகரத்தோம்[17] என்று முதலாம் இராஜாதிராஜனுடைய (கி.பி. 1018-54) கல்வெட்டில் காண முடிகிறது.

### குடிகளுள் ஒருவர்

சங்கரப்பாடியார் சமுதாயத்தில் சிறந்த நிலையைப் பெற்று, குடி களுள் ஒரு பிரிவினராகி, சாலியர், பட்டினவர் ஆகியவர்களோடு சமமாக மதிக்கப்பட்டிருக்கின்றனர் என்பதைச் சிதம்பரம் கல்வெட்டு[18]

"இந்த குணமேனிகைபுரத்து ஏறின வியாபாரிகளும் வெள்ளாளரும் சங்கரபாடியாரும் சாலியரும் பட்டினவரும் உள்ளிட்ட குடிகளும், தச்சர், கொல்லர், தட்டார், கோலியர் உள்ளிட்ட கீழ்கலனைகளும் கொண்டு இந்நிவந்தம் சந்திராதித்தவர் செலுத்தக்கடவதாகவும்". என்று தெரிவிக்கிறது.

**சபை உறுப்பினர்**

மிக உயர்ந்த பணியான பொன்னின் மதிப்பை நிர்ணயிக்கும் பணியிலும் சங்கரப்பாடியர் இடம் பெற்றிருக்கின்றனர். முதலாம் பராந்தகன் காலத்தில் (கி.பி. 907-945) உத்தரமேரூர் சதுர்வேதிமங்கலத்துச் சபையானது பொன்னின் தரத்தை அறிந்து கூறுவதற்காகச் சிலரைத் தேர்ந்தெடுக்கத் தீர்மானித்தது.[19] அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் சங்கரப்பாடியாரும் இடம்பெற்றிருக்கின்றனர்.

ஆகவே, சங்கரப்பாடியாரது அடிப்படைத் தொழில் செக்கு ஆட்டி எண்ணெய் தயாரித்தல்தான்[20] என்றாலும் சில சமயங்களில் அவர்கள் நகரத்தாருள் ஒரு பிரிவினர் நிலைக்கு உயர்ந்து, பொன்னின் தரத்தை நிர்ணயிப்பதற்குச் சபைகளில் அங்கம் வகித்து, வேளாளர் போன்ற குடிகளுள் தாங்களும் ஒரு குடியினராக மதிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள் என்று உணர முடிகிறது.

---

1 S.I I. vol. III, p. 275
2 The Cholas, page 516
3 South Indian Polity, p. 388-89
4 Dr. R. Nagaswamy, Art and Culture of Tamilnadu, p. 21
5 Epi. Indi. vol. XXII, No. 24, p. 146-147
6 As quoted by Burten Stein in his *Peasant State in Medieval South India*, p. 249
7 South Indian Temple Inscriptions vol. III, part II, p. 1424
8 A.R.E. 547 of 1920, 80 of 1897 and 78 of 1898
9 பெரியபுராணம், கலிய நாயனார் புராணம்
10 இலக்கிய சாஸன வழக்காறு, பக்கம் 162
11 S.I.I. vol. VI, No. 363
12 Ibid. III, part III
13 Ibid. III, No. 65
14 Ibid. XXIII, No. 262
15 A R.E. 395 of 1925 quoted by K.A.N. in his '*The Colas*' p. 516
16 S.I.I. vol. V, 464
17 Ibid. V, 465
18 Ibid. IV, No. 223
19 Ibid. VI, No. 295
20 தாராசுரம் ஐராவதீஸ்வரர் கோயிலில் காணப்பெறும் பெரியபுராணச் சிற்பங்களில் கலியனார் சிற்பம் செக்கு ஆடும் நிலையில் காட்டப்பட்டுள்ளது ஈண்டு கருதத்தக்கது.

# பொருப்புமேட்டுப்பட்டி செப்பேடு

மா. சந்திரமூர்த்தி
பதிவு அலுவலர், மதுரை

**கிடைத்த விபரம்**

தமிழ்நாடு அரசு, தொல்பொருள் ஆய்வுத்துறையின் பழங்கலைப் பொருட்கள் பதிவுப்பணி தொடர்பாக மாவட்டந்தோறும் ஆய்வு செய்த போது, மதுரை மாவட்டம், பொருப்புமேட்டுப்பட்டி என்னும் கிராமத்தில் திரு. சமுத்திரநாயக்க பாண்டியன் வசம் பட்டயம் ஒன்று இருப்பது கண்டறியப்பட்டது. அவர் வாகைக்குளம் ரெங்கசாமி நாயக்கர் வமிச வழியினர் ஆவர்.

**பட்டயம்**

23 செ. மீ. நீளமும் 13 செ. மீ. அகலமும் கொண்ட ஒற்றைச் செப் பேட்டின் இரண்டு பக்கங்களிலும் தமிழ் எழுத்துக்கள் உள்ளன. செப்புப் பட்டயத்தின் முதல் பக்கத்தில் 34 வரிகளும் இரண்டாம் பக்கத்தில் 9 வரிகளும் எழுதப்பட்டுள்ளன. தற்போது இப்பட்டயம் திருமலை நாயக்கர் அரண்மனை அருங்காட்சியகத் தொகுப்பில் உள்ளது.

**செய்தி**

கி.பி. 17-ஆம் நூற்றுண்டில் மதுரையை ஆண்ட திருமலை நாயக்கரின் அரண்மனை காவலன் ஒருவன் பெற்ற நன்மதிப்பை இச் செப்பேடு கூறுகிறது. விபரம் வருமாறு;

வாகக்குளத்தைச் சேர்ந்த ரெங்கயசாமி நாயக்கன் என்பான் திருமலை மன்னர் அரண்மனையில் காவல் பணிபுரிந்து கொண்டிருந்தான் ஒரு சமயம் மன்னன் தன் வேட்டை குழாத்துடன் மதுரை அருகே உள்ள மேலக்கால் உள்ளடையில் வேட்டைக்குச் சென்றிருந்தார். வேட்டையில் தன் வாலை முருக்கிக் கொண்டு பெரும்புலி ஒன்று பாய்ந்து வந்தது. அப்புலியால் அரசனுக்குத் தீங்கு வருமென்று கருதிய ரெங்கயசாமி நாயக்கன் தன் கையில் உள்ள கல்வெடியால் இரட்டைக் குண்டு போட்டுச் சுட்டான். அக்காட்சியினை ஆனைமேல் அம்பாரியில் அமர்ந்து பார்த்த அரசன் அக்கணமே அவ்வீரத்தைப் பாராட்டி தன் கழுத்தில் இருந்த கொத்துச்சரப்பளி மாலையை அவ்வீரனுக்கு அளித்து மகிழ்ந்தான். அவனை உள்ளடைக்கு அழைத்து வந்து விருந்து உபசாரம் செய்தான். பின் அரண்மனைக்கும் அழைத்து வந்து அவனை மேலும்

கௌரவிக்க வேண்டி 'உனக்கு என்ன வேண்டு'மென்று கேட்டான். அவன் தன் கிராமமான வாகக்குளத்துக்கு முதல் நாட்டாமை முதன்மை கணக்கு பொறுப்பு தாமே பெற வேண்டுமென்று கேட்டான். மன்னனும் மனமுவந்து ரெங்கயசாமி நாயக்கனுக்கு அஞ்சு கிராமத்து நாட்டாமை மானியம் அளித்தார். அக்கிராமத்திற்கு உரிய முதன்மை தீர்த்தம், மாலை முதலான முதல் தாம்பூலமும் அவனே பெறவேண்டு மென்று மன்னன் ஆணையிட்டான்.

இப்பட்டயத்தில் மானியம் அளிக்கப்பட்ட அஞ்சு கிராமத்துக்கு உரிய நான்கு எல்லைகள் குறிக்கப்படுகின்றன.

இச்செப்பேட்டில் சாட்சிக் கையொப்பமிட்டார் பெயர்களும் அவர்கள் எந்த ஊரைச் சார்ந்தவர்கள் என்ற குறிப்பும் கிடைக்கின்றன. இப்பட்டயத்தை வெட்டுவித்தான் பெயரும் குறிக்கப்பட்டுள்ளது. பட்டயத்தின் இறுதியில் திருமலை மன்னன் இவ்வாணைக்கு கையொப்ப மிட்ட செய்தியும் குறிக்கப்படுகிறது.

**நிகழச்சி நடந்த இடம்**

நிகழ்ச்சிக் நடந்ததாக குறிக்கப்படும் மேலக்கால் மதுரைக்கு வடக்கே 15 கல் தொலைவில் உள்ளது. இக்கிராமத்தின் காடுகள் நிறைந்த உட்கடைப் பகுதியே பட்டயத்தில் உள்ளடை என குறிக்கப் படுகிறது

**நான்கு எல்லைகள்**

ரெங்கசாமி நாயக்கனுக்கு நாட்டாமை மானியமாக வழங்கப்பட்ட ஐந்து கிராமங்களின் பெயர்கள் பட்டயத்தில் குறிக்கப்படவில்லை. எனினும் அந்த ஐந்து கிராமங்களுக்குரிய நான்கு எல்லைகள் மட்டும் பட்டயத்தில் குறிக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு;

1 கருமாத்தூர் மாலுக்குத் தெற்கு
2 கலுங்குக்கு மேற்கு
3 பாப்பான் அய்யன் அளிசிரை மாலுக்கு வடக்கு
4 திடியன் தூங்கதேவன் மாலுக்குக் கிழக்கு

**ஐந்து கிராமங்கள்**

இந்த நான்கு எல்லைக்குட்பட்ட ஐந்து கிராமங்கள் எதுவென அண்மையில் ஆய்வு செய்யப்பட்டு கண்டறியப்பட்டது.

1 காங்கேயநத்தம்
2 வாகைக்குளம்
3 மேட்டுப்பட்டி
4 புளியக்கவுண்டன்பட்டி
5 கல்லூர்

இறுதியாகக் கூறப்பட்ட கல்லூர் கிராமம் அழிந்து விட்டது. ஏனைய கிராமங்கள் இன்றும் உள்ளன.

**சாட்சிகள்**

ரெங்கசாமி நாயக்கனுக்கு அளிக்கப்பட்ட இந்த சுவாதீனப் பட்டயத்துக்கு சாட்சி விபரம் வருமாறு.

1. விக்கலமங்கலம் ஆண்டித்தேவன்
2. திடியன் தூங்கதேவன்
3. கொங்கபுளியங்குளம் இருளப்ப கவண்டன்

**பட்டயத்தை எழுதியவன்**

இந்தச் செப்புப்பட்டயத்தை எழுதியவன் மேலவாசல் சுப்பய்யன் ஆசாரி எனக் கூறப்பட்டுள்ளது. மதுரை அங்கயற்கண்ணி ஆலயக் கோபுரத்தின் மேற்குப் பகுதியாகவோ அல்லது திருமலைநாயக்கர் அரண்மனையைச் சுற்றியிருந்த பாரி மதிலுக்கு மேற்குப் பகுதியாகவோ மேலவாசல் அமைந்திருத்தல் கூடும்.

**இறுதி**

இந்தத் தர்மத்தை "யாதாமொருவர் அடி அளித்தால்க் காரும்பசுவைக் கொன்ற தோசத்திலும் பிருமணுளைக் கொன்ற தோசத்திலும் அடைந்து போவாருகவும்" எனக் கூறப்பட்டுள்ளது. இறுதியில் இவ்வாணைக்கு திருமலை நாயக்கர் கையொப்பமிட்ட செய்தி குறிக்கப்பட்டுள்ளது. மீனம்மாள் துணை என்றும் பட்டயத்தின் இறுதிப்பகுதி முடிந்துள்ளது.

**மொழிநடை :**

பட்டயத்தில் அமைந்துள்ள மொழிநடை கி.பி. 17-ம் நூற்றுண்டு வழக்குச் சொல்லிலே அமைந்துள்ளது. எடுத்துக்காட்டுகள் :

ஞக்கன்
உளடை
முருக்கணையில்
போயி
ரூசாவுக்கு
வாரபோது
பளுது வருமென்று
என்ன வேணுமென்று
குடுக்க வேணுமென்று
அந்தப்படிக்கி
அஞ்சு கிருமத்து
தெக்கு

கிளக்கு
யிந்த ஞங்கெல்கைக்கு
மானிபம்
வச்சுக்கொள்ளவும்
அடி அளித்தால்

முதல் பக்கம்

உ

ராமஜெயம்

செயா ஹு ஆனி மீ˝ உக உ மதுருபு
ரி தலத்துக்கு கர்த்தருகிய-ருசமானிய
ஸ்ரீ திரி திருமலேணயக்கறவர்கள் யி
டத்தில் வாகக்குளம் ரெங்கயசாமி
ஞக்கன் அரமனே காத்திருந்து மேலக்கா
ல் உளடையத்தில் கூடயிருந்து முடுக்க
ணேயில் வேட்டை மார்க்கும் போயி ரு
சாவுக்கு முன்பாக பெரும்புலி தண்டவா
ல் முருக்கி வாரபோது ருசாவுக்குப் பளுது
வருமென்று ரெங்கயசாமி ஞக்கன் கல்
வெடியால் ரெட்டைக்குண்டு போட்
டுச் சுட்டான் ருசா ஆனேமேல் அம்பா
ரி வச்சு பாத்திருந்தவர் சந்தோசமாகி கூ
ப்பிட்டு கொத்துச் சரப்பளி போட்டு உளடை
(டை)யத்துக்கு கூட்டி வந்து சாப்பாடு போட்
டு அரமனேக்கி வந்து ருசா, "உனக்கு என்ன வே
ணு" மென்று கேட்டார் "யென் கிருமத்துக்கு நா
ட்டாமை முதமை கணக்குர்- "தாம்பூரசாதின[1]
ப் பட்[ட]யம் குடுக்க வேணு" மென்று சொன்ன
ன் அந்தப்படிக்கி உத்தரவு - வாகக்குளத்து அ
ஞ்சு கிருமத்து மாலுக்கு விபரம்-கருமாத்தூ
ர் மாலூர்[2] தெக்கு-கலுங்குக்கு மேர்க்கு பா
ப்பான் அய்யன் அளிசிரை மாலுக்கு வட
க்கு-திடியன் தூங்கதேவன் மாலுக்கு கிள
க்கு-யிந்த ஞங்கெல்கைக் குள்ப்பட்ட அஞ்சு
கிராமத்துக்கும் நாட்டாமைக்கி மானிபம்[3]
ரூ[4] கூய-பொன்-கணக்கு மானிபம்[3] ரூ[4] கய
பொன் சம்மதித்த கணக்கனே வச்சுக்கொ

தொடர்ச்சி 30-ம் பக்கம் பார்க்க

# தீப்பாஞ்ச அம்மன்

வெ. இராதாகிருஷ்ணன்
பதிவு அலுவலர், சிதம்பரம்

தென்னார்க்காடு மாவட்டம் சிதம்பரம் வட்டத்தில் சேத்தியாத் தோப்பிலிருந்து காட்டுமன்னார் கோயில் செல்லும் வீராணம் ஏரிக் கரையருகில் உள்ளது பூதங்குடி என்னும் கிராமம். இவ்வூர் எல்லையில், சேத்தியாத்தோப்பு - அணைக்கரை நெடுஞ்சாலையில் சேத்தியாத் தோப்பிலிருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் அருள்மிகு தீப்பாய்ந்த நாச்சியார் திருக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் பூதங்குடி கிராமம் தாமோதர சேத்தியார் குமாரர் திரு. ஜெயராம சேத்தியார் என்பவரால் 1973-ம் ஆண்டு செங்கல் சிமென்ட்டால் கட்டப்பட்டு கும்பாபிஷேகமும் செய்விக்கப்பட்டதாகும். கருவறைக்கு முன்பாக உள்ள மண்டபம், இரண்டாண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது.

### இக்கோயில் பற்றி கூறப்படும் வரலாறு

சுமார் மூன்று தலைமுறைகளுக்கு முன்னர் திரு. ஜெயராம சேத்தியார் முன்னோர்களில் ஒருவர் வேட்டையாடப் போகும்போது காட்டுப்பகுதியிலிருந்து நாயுடு குலத்தைச் சேர்ந்த ஐந்து வயது சிறுமி ஒருத்தி சேத்தியாருடன் வர விரும்பவே, இவரும் தனக்கு வாரிசு இல்லாத காரணத்தினால் அப்பெண்ணை உடன் அழைத்து வந்து சீரும் சிறப்புமாக வளர்த்து வரலானார். காலப்போக்கில் அப்பெண்ணுக்கு தெய்வபக்தி அதிகமாகி, நித்திய பூஜைகள் செய்து வரலானாள்.

இப்பெண்ணுக்குத் தக்க வயது வந்தவுடன் சேத்தியார் வம்சத்திலேயே மணம் முடிக்கக் கருதி பெண்ணின் சம்மதத்தைக் கேட்டனர். ஆனால் அப்பெண்ணோ திருமணமே வேண்டாம் எனக் கூறி தெய்வீக நிலையடைய விரும்பினாள். ஒரு நாள் தேங்காய், பழம், மஞ்சள், குங்குமம், பூ, வெற்றிலைப் பாக்கு முதலிய பூசைப் பொருட்களைத் தம் மடியில்கட்டிக் கொண்டு, தாம் தீயில் இறங்க விரும்புவதாகவும், தாம் சாம்பலான பின்னும் பூசைப் பொருட்கள் வாடாமல் வதங்காமல் இருக்கும் என்றும், அப்பொருட்களை எடுத்து வைத்து பூசிக்கும்படியும் சேத்தியார்களிடம் கூறி விட்டு ஊர் எல்லையில் தீ வளர்க்க சொல்லி அத்தீயில் இறங்கிவிட்டாள். அப்பெண் கூறியபடியே மேற்கூறிய பூசைப் பொருட்கள் வாடாமல் வதங்காமல் அப்படியே இருக்கவும், அவற்றைக் கொணர்ந்து தற்போது கோயில் அமைந்திருக்கும் இடத்தில் வைத்து சேத்தியார் வம்சத்தினர்வழிபட்டு வரலாயினர்.

மூன்று நான்கு தலைமுறைகட்கு பிறகு இப்போது திரு. ஜெய ராம சேத்தியாரது கனவில் அப்பெண் தோன்றி தனக்கொரு கோயில் கட்டுமாறு கேட்கவே, இவரும் இக்கோயிலைக் கட்டி கும்பாபிஷேகம் செய்வித்தார்.

கருவறையில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் தேவி, சீதாதேவி அம்சமாக, இருகரங்களுடன் வலக்கரம் தாமரை மொட்டு ஏந்தியும் இடக்கரம் லோலஹஸ்தமாகவும், சுமார் 75 செ.மீ. உயரத்தில் திரிபங் கத்தில் நின்றநிலையில் கற்சிற்பமாக உள்ளது. தேவிக்கு உருவம் கொடுக்க ஆராய்ந்தபோது, சேத்தியார் வம்சத்தினரும் தீப்பாய்ந்த பெண்ணும் வைணவ மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தபடியாலும், தன் கற்பைச் சந்தேகித்த இராமபிரானுக்கு முன்னிலையில் சீதை தீயில் இறங்கிய முறையையும் பின்பற்றி இத்தெய்வத்தையும் சீதை அவதாரமாகக்கருதி அதே உருவத்தில் அமைத்ததாகக் கூறப்படுகிறது. சேத்தியார் எனப்படுவோர் படையாச்சி குலத்தின் ஒரு பிரிவினராவார்.

---

28-ம் பக்கத் தொடர்ச்சி

29 ள்ளவும் குதிரை மட்டம் குடுத்தார் ஷெி வா
30 கக் குளத்தைச் சேர்ந்த அஞ்சு கிருமத்து
31 நாட்டாமை-முதமை தீத்தந் திருமாலே சக
32 லமும் ரெங்கசாமி நாகனுக்கு சாதினப்ப
33 ட்டயத்துக்கு உத்தரவு யிந்தப்படிக்கி சாட்சி வி
34 க்கலமங்கலம் ஆண்டித்தேவன் திடியன்

**இரண்டாம் பக்கம்**

35 தூங்கதேவன் - கொங்கபுளியங்குளம்
36 யிருளப்ப கவண்டன் யிந்தப்பட்டயம் செ
37 ய்தவன் மேலவாசல் சுப்பயன் ஆசாரி
38 யிதை யாதா மொருதர் அடி அளித்தால்க்[5]
39 காரும் பசுவைக் கொன்ற தோசத்திலும்
40 பிருமணூளக் கொன்ற தோசத்திலும் அடை
41 ந்து போவாருகவும் யிந்தப்படிக்கி - கர்த்த
42 ருகிய திருமலே ஞயக்கரவர்கள் கய்யில்ப்
43 பம் உ மீனம்மாள் துணே

---

1. சுவாதீனப் பட்டயம்
2. மாலுக்கு என்று இருத்தல் வேண்டும்
3. மானியம்
4. பொன் என்பதற்கான குறியீடு
5. அழித்தால் என்று படிக்கவும்

# திருமறு (ஸ்ரீவத்ஸம்)

கி. ஸ்ரீதரன், எம்.ஏ.
அகழ்வாய்வாளர்

செல்வத்திற்குத் தலைவியாகத் திருமகள் அழைக்கப்படுகிறாள். அவள் பல்வேறு உருவ அமைப்புகளில் காணப்படுகிறாள். அவற்றில் ஒன்றாகத் 'திருமறு' அல்லது ஸ்ரீவத்ஸம் என்ற உருவில் காட்டப் படுகிறாள்.

திருமால் திருமகளைத் தன் மார்பில் தாங்கிக் கொண்டிருக்கிறார். திருமகள் திருமாலின் வலது மார்பில் இருப்பதை குறிக்கும் சின்னமே திருமறுவாகும். இச்சின்னம் காலப்போக்கில் சிற்ப உருவில் பல மாறுதல் அடைந்துள்ளது. இதைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரை யின் நோக்கமாகும்.

**சங்க இலக்கியங்களில்**

'திருமறு மார்பன்' என முல்லைக்கலி கூறுகிறது. பரிபாடல் திருமாலை 'திருமறு மார்பின் உறவோன்' 'திருமறுச் செய்யோள் சேர்ந்தது நின் மாசில் அகலம்', 'பொன்னிற் தோன்றிய புனைமறு மார்ப' என்று குறிக்கும். திருமகளைத் திருமால் மார்பில் தாங்கிக் கொண்டி ருக்கிறார் என்பதை மேலும் சில பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

*மாதாங்கு தடக்கை*
*நீர்செல நிமிர்ந்த மா அல்* — முல்லைப் பாட்டு

*இரு நிலங் கடந்த திருமறு மார்பன்*
*முந்நீர் வண்ணன்* — பெரும்பாண் 29-30

**சிற்பங்களில்**

காவேரிப்பட்டினம் (பூம்புகார்) அகழ்வாய்வில் பளிங்கு கல்லால் ஆன புத்த பாதம் ஒன்று கிடைத்துள்ளது. அதில் ஸ்ரீ வத்சம் பொறிக்கப்பட்டுள்ளது. இதுவே தமிழகத்தில் கிடைத்துள்ள திருமகளின் மிகப்பழைய உருவமாகும்.

புகளூருக்கு எதிர்கரையில் உள்ள மோகனூருக்கு அருகில் நான்கு கல் தொலைவில் செங்நாக்குன்று என்னும் ஒரு சிறு குன்று உள்ளது. அதில் இயற்கையாக அமைந்த குகைத்தளம் ஒன்று இருக்கிறது. அதில் சமண பெரியார்கள் வாழ்ந்த படுக்கைகள் உள்ளன. அவற்றில் ஒன்றில் 'ஸ்ரீவத்ஸம்' என்னும் மங்கல உருவம் சிற்பமாகச் செதுக்கப் பட்டுள்ளது. இது கி.பி. மூன்றும் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

மேலும், செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த மணிமங்கலம், மதுராந்தகம், கூரம் ஆகிய ஊர்களிலிருந்தும் திருமறுவின் உருவங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன[1].

மணிமங்கலம்

இவ்வூர் சிவன் கோயிலில் காணப்பெறும் சிற்பத் தொடரில் நான்முகன், இலிங்கம், உமை, முருகன், நரசிம்மர், திருமறு ஆகிய உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இதில் நரசிம்மர் அருகில் தாமரை மலர் ஒன்று உயர்ந்த தண்டில் காணப்படுகிறது. அதன் மேல் பந்து போன்ற உருவம் காணப்படுகிறது. அதன் தலைப்பகுதியில் கிரீடம் ஒன்று காணப்படுகிறது. மிகவும் பழமையான சிற்பங்களில் இவ்வாறு திருமகள் காணப்படுகிறாள். நரசிம்மர் அருகில் காணப்படுவதால் லஷ்மி நரசிம்ம மூர்த்தியின் உருவைக் குறிக்கிறது. இது கி.பி. 6-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்[2].

மதுராந்தகம்

இவ்வூரில் உள்ள சிவாலயத்தில் காணப்பெறும் சிற்பத்தொடரில் திருமால், ஜேஷ்டாதேவி, திருமாலின் வலது தோளுக்கு மேலே திருமறு, அர்த்தநாரீச்சுவரர் உருவம் ஆகியவை காணப்படுகின்றன. இது கி.பி. 7-8ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

கூரம்

காஞ்சிபுரத்தின் அருகில் உள்ள கூரம் என்ற இடத்தில் திருமறுவின் சிற்பம் ஒன்று காணப்படுகிறது. பல்லவ மன்னன் பரமேஸ்வரன் காலத்தில் இங்கு கோயில் எழுப்பப்பட்டது. ஆகவே அவன் காலத்தைச் (கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச்) சார்ந்ததாக இச் சிற்பங்களைக் கருதலாம்.

காவேரிப்பாக்கம்

வடஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த காவேரிப்பாக்கத்தில், பாதி மானிட உருவையும், உருண்ட பந்து போன்ற கால்களையும் உடைய இவ்வுருவின் இருபுறமும் இரண்டு மத்தகஜங்கள் காணப் படுகின்றன. ஒன்று குடத்திலிருந்து நீரைத் தேவியின்மீது கொட்டும் நிலையிலும் மற்றொன்று கலசம் ஏந்திய நிலையிலும் உள்ளது. இதுவும் கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம். இவ்வூரிலிருந்து கிடைத்த பல பல்லவர் காலச் சிற்பங்கள் சென்னை அரசினர் பொருட் காட்சி சாலையில் உள்ளன. அவற்றிலும் இங்கு உள்ள திருமறுவைப் போன்ற ஓர் உருவம் உள்ளது குறிப்பிடத்தக்கது.

### வேலஞ்சேரி

அண்மையில் திருத்தணிக்கு அருகில் வேலஞ்சேரி என்ற இடத்திலிருந்து இரு செப்பேடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவ்வூரிலிருக்கும் சிவாலயத்திலிருந்து ஒரு திருமறுவின் சிற்பம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தாமரையின் மீது திருமறு பந்து உருவம் போல காணப்படுகிறது. தலையில் கிரீட மகுடம், தலைக்குமேல் குடை உள்ளது. இருபுறமும் விளக்குகள் உள்ளன. விளக்குகளின் கீழே இடதுபுறம் சங்கும், வலதுபுறம் தாமரையும் காணப்படுகின்றன. இவைகளை சங்கநிதி, பத்மநிதி என அழைப்பர். இவை செல்வத்துக்குரிய அடையாளங்கள். இருபுறமும் உள்ள யானைகளில் ஒரு யானை திருமறுவின் முடிமீது கலசத்தை ஏந்தி அபிடேகம் செய்யும் நிலையிலும், மற்றொரு யானை கலசத்தை ஏந்திய நிலையிலும் இருக்கின்றன.

### கல்வெட்டுக்களில்

கல்வெட்டுக்களில் மங்கல வாழ்த்துடன் மங்கலச் சின்னங்களும் பொறிக்கப்படுவது உண்டு. காரவேலனின் ஹாதிகும்பாக் கல்வெட்டின் அருகில் ஸ்வஸ்திகம், ஸ்ரீவத்சம் ஆகியவை பொறிக்கப்பட்டுள்ளன. வேலஞ்சேரியில் கிடைத்துள்ள பல்லவர் செப்பேட்டின் முத்திரையிலும் ஸ்ரீவத்சம் காணப்படுகிறது.

### செப்புத் திருமேனி

தஞ்சை மாவட்டம் ஏனாதி என்ற இடத்திலிருந்து திருமறுவின் சிறிய செப்புத் திருமேனி ஒன்று கிடைத்துள்ளது.

### அகழ்வாய்வில்

காஞ்சிபுரத்தில் நடைபெற்ற அகழ்வாய்வில் எலும்பினால் ஆன ஸ்ரீவத்சம் போன்ற பொருள் ஒன்று கிடைத்துள்ளது.[3]

### பிறமதச் சிற்பங்களில் ஸ்ரீவத்ஸம்

சமண, புத்த சிற்பங்களிலும் திருமறு உருவம் காண முடிகிறது. சமண தீர்த்தங்காரரின் மார்பில் திருமறு காணப்படுகிறது. இதனால் அவர்கள் 'மகாபுருஷர்கள்' என அழைக்கப்படுகிறார்கள்.


### காலப்போக்கில் வளர்ச்சி

ஆரம்ப நிலையில் நடுவில் ஒரு கோடும், ஆங்கில எழுத்து 'எஸ்' வடிவில் இருபுறமும் அக்கோட்டில் ஒட்டினாற் போன்றும் இருக்கும். வடஇந்தியாவின் மத்திய காலத்தைச் சேர்ந்த சிற்பங்களில் திருமறு நான்கு இதழ் கொண்ட பூ வடிவில் உள்ளது. பக்க இதழ்கள் சிறியனவாகவும், மேற்புறம் உள்ளது நீளவடிவாகவும், கீழ்ப்புறம் உள்ளது அதைவிடச் சற்று நீளவடிவாகவும் காணப்படும்.[4]

குஷாணர் சிற்பங்களில் காணப்படுவது போன்றும் அமராவதி சிற்பங்களில் காணப்படுவது போன்றும் திருமறு உரு தென்னிந்தியாவில் காணப்படுகிறது. பல்லவர்காலச் சிற்பங்களில் பந்து வடிவில் கை கால்களுடன் காணப்படுகிறது.

9-10-ஆம் நூற்றூண்டு வரை தனிச் சிற்பமாகவும், சிற்பத் தொடரிலும் காணப்படுகிறது. பிறகு இம்மாதிரியான பந்து வடிவு உடையதாகத் திருமகள் சித்தரிக்கப்படுவதில்லை. பிற்காலத்தில் செப்புத் திருமேனிகளிலும் சிற்பங்களிலும் முக்கோண வடிவில் திருமாலின் வலது மார்பில் காட்டப்பட்டிருக்கும். இக்குறியை வைத்துக் கொண்டே ஒரு செப்புத் திருமேனியை இது யாருடைய திருமேனி என்று எளிதாகக் கண்டு பிடித்து விடலாம்.

1 இரா. நாகசாமி, திருமகள், கல்லும் சொல்லும் - பக்கம் 33-34
2 Damilica vol I, Dept. of Archaeology
3 Excavation at Kanchipuram - Indian Archaeology A review 1971-72 p. 43, plate XLIV
4 C. Sivaramamurthi, Goddess Lakshmi and her symbols, Journal of U. P. historical society vol. XIV p. 21-24



வைஷ்ணவி, வாராஹி, இந்திராணி
கி.பி. 10-ஆம் நூற்றூண்டு-திருவையாறு-தஞ்சை மாவட்டம்

# தகடூர் நாட்டில்
# சோழர்கால சமூக, பொருளியல் நிலை

சொ. சாந்தலிங்கம், எம்.ஏ.,
அருங்காட்சியகக் காப்பாளர், தருமபுரி

இன்று தருமபுரி மாவட்டமென பெயர் பெற்றிருக்கும் அன்றைய தகடூர் நாடு பெரும்பகுதி மலைகளும், காடுகளும் நிறைந்த வறட்சி மிகுந்த ஒரு நிலப்பரப்பாகும். சங்க காலத்தில் இப்பகுதியை ஆண்ட அதியமான்களின் வரலாற்றை இலக்கியங்கள் மூலமாகவே நாம் அறிய முடிகிறது. அவர்களது அரசியல் வரலாறு முழுமையாக அறியப் படாமையால் சமூக, பொருளாதார நிலைமையும் நமக்குப் புதிராகவே உள்ளது.

## அதியருக்குப் பின்

சங்க காலத்திற்குப் பின்னர் இப்பகுதியில் காணப்படும் கல்வெட்டுச் சாசனங்களின் துணைகொண்டு பல செய்திகளை நாம் தெரிந்து கொள்கிறோம். கி.பி. 9-ஆம் நூற்றாண்டு வரை பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் ஒன்றிரண்டைத் தவிர பிற அனைத்தும் நடுகற்களாகவே இருப்பது குறிப்பிடத் தக்க ஒன்றாகும்.[1] தொன்மையான வட்டெழுத்துக்களாலான சாசனங்கள் மிகுந்த அளவில் இங்கே கிடைக்கின்றன. இவற்றின் உதவியால் கி.பி. 4 முதல் 9-ஆம் நூற்றாண்டு வரையிலான இப்பகுதி மக்களின் வாழ்நிலையை ஓரளவு அறியமுடிகிறது. பெரும்பாலான நடுகற்கள் நிரை கவர்தல், நிரை மீட்டல் ஆகியவற்றின்போது நேர்ந்த பூசல்களில் உயிர்நீத்த வீரர்களின் நினைவுச் சின்னங்களாம். இன்னும் சில வனவிலங்குகளோடு மோதி உயர் துறந்த வீரர்களின் கதைகளைக் கூறி நிற்கின்றன. இதன் மூலம் அக்கால மக்கள் தங்கள் வாழ்க்கையை இப்பகுதியில் தொடங்கும்போது காடுகளை அழித்தனர் என்பதும் அந்நேரத்தில் மனித இனத்திற்கும் வன விலங்கினங்களுக்கு மிடையே போராட்டம் ஏற்பட்டது என்பதும் அவைகளை வென்று தான் மக்கள் இங்கு நிலைபெறவேண்டிய சூழல் இருந்தது என்பதும் புலப்படும். செல்வமாக இம்மக்கள் கருதியது மாடுகள் தான். இதுவே உலகின் பல பகுதிகளிலும் தொடக்ககால நாகரீக மக்களால் பெரும் சொத்தாக மதிக்கப்பட்டதுமாகும். இம்மாட்டுச் செல்வத்தைக் கவர்வதும், கவர்ந்ததை மீட்பதுமே அக்கால வாழ்க்கைப் போராட்டமாக இப்பகுதியில் பெருமளவில் நிலவியது என்பதையும் நடுகற்களின் வாயிலாக அறிகிறோம்.

**அரசுகள்**

கி.பி. 6, 7, 8-ஆம் நூற்றுண்டுகளில் தகடூர் நாடென்னும் இப் பகுதி பல்லவரின் ஆளுகைக்குட்பட்டது. கங்கர்களும், பாணர்களும் பல்லவர்கட்கு அடங்கியும் எதிர்த்தும் சிற்றரசர்களாக இங்கே ஆட்சி புரிந்தனர். கி.பி. 9, 10-ஆம் நூற்றுண்டளவில் நுளம்பர்களின் ஆட்சி இப்பகுதியில் பரவியது. இதன் காரணமாக 'நுளம்பபாடி' என்ற புதிய பெயரையும் இப்பகுதி பெற்றது. இக்காலக் கட்டத்தில்தான் தென் தமிழ் நாட்டில் எழுந்த சோழப் பேரரசு தன் எல்லைகளை விரிவு படுத்திக் கொண்டிருந்தது. பல நாடுகளையும் வென்று மீண்ட முதலாம் இராசராசன் இப்பகுதியையும் வென்று நுளம்பபாடியை வென்றதாகத் தன் மெய்க்கீர்த்தியில் குறிப்பிட்டுக் கொண்டான். இராசராசனே இப்பகுதியில் சோழராட்சிக்கு அடிகோலியவன் எனலாம்.

**நாட்டுப் பிரிவுகள்**

தொண்டை மண்டலம், பாண்டி மண்டலம் என்பது போன்று தனியாக மண்டலம் எதுவும் இப்பகுதியில் ஆரம்பகாலத்தில் வழங்கப் படவில்லை. கி.பி. 7-ஆம் நூற்றுண்டுவரை புறமலை நாடு, கோவூர் நாடு, மீ கொன்றை நாடு, மீவேணாடு, தகடூர் நாடு என்று ஐந்து நாட்டுப் பிரிவுகள் இருந்தன. கி.பி. 8, 9 ஆம் நூற்றுண்டளவில் கிடைக்கும் கல்வெட்டுகளைக் கொண்டு இதே பகுதியில் மேலும் ஆறு நாடுகள் வழிங்கிவந்தமை பெறப்படுகிறது. அவையாவன கங்கநாடு, கோயிலூர் நாடு, வேளாள நாடு, தாயனூர் நாடு, வேள்கலி நாடு, மன்னநாடு என்பவையாகும். இவை தவிர எயில்நாடு என்பது ஒன்றும் குறிக்கப்படுகிறது. பிற்காலத்தில் அலைமலை நாடு, வல்லவரையர் நாடு, விரிவீரநாடு, மாசந்தி நாடு, பாழநாடு என்ற வேறு பல நாடுகளும் வழங்கப்பட்டன.

இராசராசனால் வெற்றி கொள்ளப்பட்ட நுளம்பபாடி என்பது அவனது பெயரால் நிகரிலி சோழ மண்டலம் என்னும் புதிய பெயரைப் பெற்றது. இராசராசன் தான் வென்ற பல பகுதிகளிலும் தன் பெயர் விளங்கும்படி அந்நாட்டுப் பிரிவுகளுக்குத் தன் பட்டப் பெயர்களை இட்டு வழங்கினன். எனினும் நிகரிலி சோழ மண்டலம் என்னும் பெயர் ராசராசன் காலத்தில் இங்கு வழக்கில் இருந்தமைக்குச் சான்றுகள் இல்லை. முதலாம் இராசேந்திரன் காலத்தில்தான் "நுளம்பாடியான நிகரிலி சோழ மண்டலம்" என்று குறிக்கப்படுவதைக் காண்கிறோம். எனவே இராசராசனுக்குப் பிறகே இப்பெயர் பெரு வழக்கில் இருந்ததாகக் கொள்ளலாம். மேலும் முதலாம் ராசேந்திரன் காலத்திலேயே அவனது மகன் ராசாதிராசன் பெயரால் விஜய ராசேந்திர மண்டலம் என்ற பெயரும் இதே நிகரிலி சோழ மண்டலத் திற்கு வழங்கப்பட்டுள்ளது. பெண்ணேஸ்வரமடம், ஏற்ற சிறன

ஹள்ளி ஆகிய ஊர்களில் காணப்படும் இராசேந்திரன் கால நடுகற்கள் இதற்குச் சான்றாகும். இது தவிர கி.பி. 13-ஆம் நூற்றாண்டு அளவில் முடிகொண்ட சோழமண்டலம் என்றதொரு புதிய பெயரையும் இப்பகுதி பெற்றது. "இம் மாற்றம் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் ஏற்பட்டிருக்க வேண்டும். அவன் காலத்தில் இப்பகுதி சோழர் கையை விட்டுச் சென்று மீண்டும் அவனால் கைப்பற்றப் பட்டது. ஆதலின் இப்பெயர் மாற்றம் ஏற்பட்டிருக்கவேண்டும்."

இவ்விடத்தில் நாம் சற்று ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய செய்தி ஒன்று உண்டு. சோழராட்சியின் பிறபகுதிகளில் வழங்கிய நாட்டுப் பிரிவுகளான "வளநாடு" என்னும் ஒரு உட்பிரிவு வகை இப்பகுதியில் அவ்வளவாக வழக்கில் இல்லாமல் இருந்துள்ளது. இராசேந்திர சோழ வளநாடு[3], எதிரிலி சோழ வளநாடு என்ற இரண்டு வளநாடுகள் மட்டுமே குறிக்கப்பட்டுள்ளன.

**சோழர் சாசனச் செய்திகள்**

இப்பகுதியை ஆண்ட சோழர்களின் சாசனங்கள் பொதுவாகக் குறைந்த அளவிலேயே கிடைக்கின்றன. முதலாம் இராசராசன் தொடங்கி மூன்றாம் இராசராசன் வரை உள்ள மன்னர்கள் காலக் கல்வெட்டுகள் உள்ளன. இங்குக் கட்டப்பட்ட கோயில்களும் குறைவு; அவற்றிற்கு அளிக்கப்பட்ட கொடைகளும் பிற சோழ நாட்டுப் பகுதிகளை ஒப்பிடும் போது மிகமிகக் குறைவு. இராசராசனின் 25-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று அரூர் வட்டம் மோட்டுப்பட்டி என்னுமிடத்தில் உள்ளது. இக்காலத்தில் புறமலைநாட்டு அரியூருடைய வீரசோழ காமுண்டன் மகன் நன்னி காமுண்டன் என்பவன் இவ்வூர் கோயிலுக்கு நிலம் கொடுத்துள்ளான். இக்காலத்தில் வச்சயன் பிரமாதிராயன் என்பவன் இப்பகுதியின் பெந்தரமாக (நிர்வாகஸ்தன்) இருந்து ஆட்சி புரிந்துள்ளான்.

முதலாம் இராசேந்திரனின் 29-ஆம் ஆட்சியாண்டில் உத்தமசோழ புறமலை நாடாழ்வான் என்பவன் தீர்த்தமலை ஈஸ்வரன் கோயிலைப் புதுப்பித்து முகமண்டபமும் எடுத்ததோடு நந்தா விளக்கும், நிலமும் கொடையளித்துள்ளான். மேலும் இவன் இங்கு சண்டேசுவரர் கோயில் சேத்திரப் பாலர் கோயில் முதலியவை எடுப்பித்தான்.[5]

இராசேந்திரனின் அழியாநிலை காரிப்பெருமானான பைங்கலன் என்பான் தீர்த்தமலைக் கோவிலுக்கு விளக்கெரிக்க பொன்னும், இன்னும் பிறர் வேறு பல கொடைகளும் அளித்துள்ள செய்திகளை இங்குள்ள கல்வெட்டுகள் கூறி நிற்கின்றன. இவன் காலத்தில் பனை குளத்தில் நாட்டுக்காமிண்டன் மதுராந்தக வேளான் என்பவனால் தூம்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

வீரராசேந்திரன் காலத்தியக் கல்வெட்டுகள் ஊத்தங்கரை வட்டத்தில் காணப்படுகின்றன. ஆனந்தூரில் உள்ள சிவன் கோவிலுக்கு துறுமூருடையான் என்பவன் நொந்தாவிளக்கும் நிலமும் இக் காலத்தில் தானம் அளித்துள்ளான்.[7]

முதல், இரண்டாம் குலோத்துங்க சோழர்களுடைய கல்வெட்டுக்கள் ஒன்றிரண்டு மட்டும் முறையே ஒசூர், சிந்தல்பாடி ஆகிய விடங்களில் கிடைத்துள்ளன. ஆனால் பெரும் சிதைவுகள் காரணமாக இக் கல்வெட்டுகளைக் கொண்டு குறிப்பிடத்தக்க செய்திகள் எதையும் தெரிந்து கொள்ள முடியவில்லை.[8]

இதே போல் விக்கிரமச் சோழன் காலத்திய சிதைந்த கல்வெட்டு ஒன்றும் கம்பை நல்லூர் கலிங்கு ஒன்றில் காணப்படுகிறது.[9]

மூன்றும் குலோத்துங்கன் காலத்திய கல்வெட்டுகள் அதியமான் கோட்டை, தருமபுரி, சிந்தல்பாடி, கம்பை நல்லூர், ராயக்கோட்டை ஆகிய ஊர்களில் பரவலாகக் காணப்படுகின்றன. தருமபுரி, அதியமான் கோட்டை ஆகிய ஊர்க்கல்வெட்டுகள் பெரிதும் சிதைந்துள்ளமையால் செய்திகள் ஏதும் தெரிய முடியாத நிலையில் உள்ளது.

மூன்றும் குலோத்துங்கன் காலத்து சிந்தகப்பாடி சிவனீசுவரமுடையார் கோவில் கல்வெட்டுகள் இரண்டு நிலதானம் பற்றிக் கூறுகின்றன[10]. இவனது 16-ஆம் ஆட்சியாண்டில் இக்கோயிலுக்கு ஆலால சுந்தரன் என்பான் 64 மாடுகள் தானம் அளித்துள்ளான்.[11] இதே காலத்தில் தேவரடியாள் ஒருத்தி இருநொந்தா விளக்குகள் இக்கோயிலுக்கு கொடுத்திருக்கிறாள். இவனது 23-ஆம் ஆட்சியாண்டில் இக் கோயிலுக்குக் காரி மங்கலத்துக் கெண்டையன் மலையன் என்பான் ஒரு சந்தி விளக்கு எரிக்க ஒரு பொன்னும், கானுமான் உடையான் என்பவன் ஒரு விளக்குக்கு ஒரு பொன்னும், யாசகவேளான் என்பவன் மூன்று விளக்கு எரிக்க ஆறு பசுவும், பிடவாரியார் என்பவர் இரண்டு சந்தி விளக்கு எரிக்க ஆறு பசுவும் கொடையாக அளித்துள்ளனர்.[12] இக்கல்வெட்டை நாம் பார்த்தால் ஒரு விளக்கு எரிக்க ஒருவர் ஒரு பொன் மட்டும் கொடுத்திருக்க மற்றவர்கள் ஒரு விளக்குக்கு இரண்டு மூன்று பசு கொடையாக அளித்துள்ளது புலப்படும். எனவே ஒரு பொன்னுக்குச் சமமாக 2 (அ) 3 பசுக்கள் மதிக்கப்பட்டதாகக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. இதன்மூலம் அக்காலத்தில் பணப் புழக்கம் குறைவாகியும், ஆனால் அதன் மதிப்பு உயர்ந்தும் இருந்தது என கொள்ளலாம்.

இம் மூன்றும் குலோத்துங்கன் காலத்தில் அதியர் பரம்பரையில் வந்த இராசராச அதிகன் விடுகாதழகிய பெருமாள் சிந்தகப்பாடி சிவன் கோயிலுக்கு நிலதானம் அளித்துள்ளான்.[13] இவன் பெண்ணை

யாற்றங் கரையில் சிறுகோட்டை என்னுமிடத்தில் கற்கோயில் ஒன்று கட்டினனென்று கம்பை நல்லூர்க் கல்வெட்டு கூறும்.[14]

மூன்றும் இராசராசன் காலத்திய கல்வெட்டுகள் சில இப்பகுதியில் கோவில்களுக்குச் செய்த அறச் செயல்களைக் கூறுகின்றன. சிந்தகப்பாடிக் கல்வெட்டு ஒன்றில் நிலதானம் கூறப்படுகிறது. இக் கல்வெட்டில் இருகண்டக நிலம் என்று நில அளவு ஒன்றும் குறிப்பிடப் படுகிறது.[15] கண்டகம் என்பது முகத்தலளவையாக இருக்கலாம். கண்டக அளவு தானியம் விளையும் நிலம் என்னும் கருத்தில் இவ்வளவைப் பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்பார் டாக்டர். நாகசாமி அவர்கள்.

தீர்த்தமலைக் கோவிலுக்கு இக்காலத்தில் முடிகொண்ட சோழ கற்கடக மாராயன் என்னும் குறுநிலத் தலைவனால் தானம் வழங்கப்பட்டுள்ளது.[16] இந்த அளவில் சோழரது ஆட்சியின் கீழ் மக்களது சமூக வாழ்க்கை சற்று முன்னோக்கிப் போயுள்ளது எனக் கருதலாம்.

தகடூர் நாட்டிலே அடங்கியிருந்த பகுதியாகிய பையம்பள்ளியில் நிகழ்ந்த அகழ்வாய்வின் போது மக்கிப் போன புன்செய் தானியமான சோளம் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் மூலம் தொன்று தொட்டே இப்பகுதியில் புன்செய்ப் பயிர்கள் தான் விளைந்தன எனக் கருதத் தோன்றுகிறது. மேலும் கல்வெட்டுகளில் கூட நன்செய்ப் பயிர்களைப் பற்றிய குறிப்புகளைக் காண முடியவில்லை. மூன்றும் குலோத்துங்கன் காலக் கல்வெட்டு[17] ஒன்றில்தான் நன்செய் தானியமான நெல் குறிப்பிடப் படுவதைக் காண்கிறோம். கம்பு, சோளம், ராகி, சாமை, வரகு, பருத்தி மற்றும் எண்ணை வித்துக்கள், பயிறு வகைகள் போன்ற புன்செய்ப் பயிர் வகைகளே அதிகம் இப்பகுதியில் இருந்தன என்று சான்றுகள் உள்ளன.[18] குளம், கலுங்கு போன்ற நீர்ப்பாசன பணி வசதிகள் ஏற்படுத்தப்பட்டமைக்கும் போதுமான சான்றுகள் இல்லை.

---

1 டாக்டர். நாகசாமி தருமபுரிக் கல்வெட்டுகள் முதல் தொகுதி முன்னுரை III
2 Ibid p. v 3 Ibid எண் 146 4 Ibid எண் 67
5 Ibid எண் 54 6 ARE 672, 673/1905
7 தருமபுரிக் கல்வெட்டுகள் முதல் தொகுதி எண் 73
8 Ibid எண் 130, 30 9 ARE 12/1900
10 தருமபுரிக் கல்வெட்டுகள் முதல் தொகுதி எண் 36, 37
11 Ibid எண் 39 12 Ibid எண் 42 13 Ibid எண் 43
14 Ibid எண் 13 15 Ibid எண் 51 16 ARE 660/1905
17 ARE 207/1910
18 F. J. Richards, Salem District Gazetteers Vol I part II, p. 62

# கொடையாகக் கொடுத்த கொடை

சு. இராசகோபால் எம்.ஏ.,
கல்வெட்டாய்வாளர்

புதுக்கோட்டைப் பகுதியில் ஒரு கோமான். பெயர் வேதன் திருச்சிற்றம்பல முடையான். இவனைப்பற்றி பாடுவதற்காகச் செங்கற்பட்டுப் பகுதியில் பிறந்த ஒரு புலவர் சென்றார். இவர் பெயர் குன்றன் திருச்சிற்றம்பலமுடையான். கோமானைப் பாடிப் புலவர் ஒரு நிலப் பரப்பைப் பரிசிலாகப் பெற்றார். அவர் கவிபாடி பரிசிலாகப் பெற்ற காணியை அப்படியே அவ்வூர் இறைவனுக்குக் கொடுத்து விட்டார். பெயரைப் பார்க்கின்ற போது புலவரும், புரலவனும் சிறந்த சிவபக்தர்களாகவே தெரிகின்றனர். பெயரிலும் ஒரு பொருத்தம், இருவரும் திருச்சிற்றம்பலம் உடையவர்கள்.

புதுக்கோட்டை மாவட்டம் மடத்துக் கோவிலில் இச்செய்தியைக் குறிக்கும் கல்வெட்டு உள்ளது. குலோத்துங்க சோழனின் 18-வது ஆண்டுக் (கி.பி. 1145) கல்வெட்டு.* புலவரின் கவியுடன் தொடங்குகிறது.

" ஸ்வஸ்தி ஸ்ரீ வாளை வயிறு நிறைய் மடற் கமுகம்
பாளை பசுந்தேந்நொழுகும் பைய்யூரே
நாளை யென்று செப்பாத வாய்மையாந்
வேதந் திரு மனு நுலொப்பா நெங் கோமாற்றநார்'

ஸ்வஸ்தி ஸ்ரீ கோவிராஜகேசரி பந்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ கொலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு ௰அ ஆவது இரட்டபாடி கொண்ட சோழ வளநாட்டு வடகோநாட்டு உறத்தூர்க் கூற்றத்து உடையார் திருப் பெருமானுண்டார்க்கு ஜெயங்கொண்ட சோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்து மருதத்தூர் மருதத்தூருடையாந் குன்றன் திருச்சிற்றம்பல முடையானேந் கன்னி ஞாயற்று ஏழாந்தியதியும் திங்கள்க் கிழமையும் பெற்ற உத்திரட்டாதி நாள் இத் திருப்பெருமானுண்டார் திருக்கை மலரிலேய் நான் நீர் வார்த்த குடிகாடு இரட்டபாடி கொண்ட சோழ வளநாட்டு வடகோநாட்டு உறத்தூர் கூற்றத்துப் பைய்யூர் பைய்யூருடையான் திருச்சிற்றம் பல முடையான் வேதவன முடையானை நான் கவிபாடி பாடின கவிக்கு எனக்கு பரிசில் தந்தநந் காணியான குடிகாடு . . . . . ."

என்று செல்கிறது அக்கல்வெட்டு.

* புதுக்கோட்டைக் கல்வெட்டுகள் எண் 129